# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 05 புதன்கிழமை (20-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:24


# அரசும் புலிகளும் உடனடியாக பேச்சு நடத்த வாய்ப்பு இல்லை!

## இடைவெளி காணப்படுகிறது என்கிறார் நோர்வே இராஜாங்க அமைச்சர்

ஒஸ்லோ,டிசெம்பர்20

**இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரின் நிலைப்பாடுகளிலும் இடைவெளி காணப்படுகின்றது. இது இரு தரப்பினரும் கிட்டிய வருங்காலத்தில் நேரடிப் பேச்சுக்கு நகர்வதைத் தடுப்பதாக உள்ளது.**

**நோர்வே அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் றேமண்ட் ஜெகான்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

இலங்கை விவகாரத்தில் தற்போது உள்ள நிலை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இனப்பிரச்சினை தொடர்பாக முக்கிய விடயங்களில் தமது நிலைப்பாடுகள் குறித்து இலங்கை அரச தரப்பினரும் விடுதலைப் புலிகளும் அறிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

இரு தரப்பினரும் பேச்சு நடத்துவது தொடர்பான விருப்பத்தை அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்தியது குறித்து நோர்வே திருப்தி அடைகிறது.

தற்சமயம் நடக்கும் போருக்கு முடிவுகாண இரு தரப்பினரும் விருப்பம் கொண்டுள்ளனர் என்ற புரிந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்குரிய நல்ல சந்தர்ப்பம் நழுவிப் போவது கவலை தருகிறது

### கூட்டணி தூதுக்குழுவிடம் இந்தியத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.20

'இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்குரிய நல்ல சந்தர்ப்பம் நழுவிப் போவது கவலை அளிக்கிறது.'

இப்படி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு தம்மைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழுவிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, எஸ்.சிவமகாராசா, பொன்.செல்வராசா மற்றும் செயலர் ஆர்.சம்பந்தன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

தற்சமயம் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்ட பேச்சுக்கள் குழம்பும் நிலையில் உள்ளன. இதனைத் தடுக்க இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டுமென்று தூதுக்குழு அவரிடம் கேட்டுக்கொண்டது.

அதற்குப் பதிலளிக்கையிலேயே தமது கவலையை அவர் தெரிவித்தார். (இ-3)

## ஊரடங்கு நேரத்தை குறைக்குமாறு படைத் தரப்பினரிடம் கோரிக்கை

### பலாலியில் நடைபெற்ற மாநாட்டில்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டுவரும் ஊரடங்குச் சட்ட நேரத்தை மேலும் ஒரு மணித்தியாலத்தினால் குறைக்கவேண்டுமென்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் பலாலியில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது படை அதிகாரிகளிடம் வலியுறுத்தினர்.

யாழ்.குடாவில் தற்பொழுது இரவு 8 மணி தொடக்கம் காலை 5 மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுவருகிறது. ஊரடங்குச் சட்ட நேரத்தில் மேலும் ஒரு மணித்தியாலம் குறைத்து இரவு 9மணி தொடக்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்யலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையிலான விமான சேவைகள் அதிகரிக்கப்படுவதுடன் கப்பல் சேவையும் சீராக்கப்பட வேண்டும் என்றும் -

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தின் பெறுமதியை அதிகரிக்கவேண்டும் என்றும் -

கடலில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும் அல்லது அவர்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்கவேண்டும் என்றும்-

இராணுவ வாகனங்களினால் ஏற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 1,400 தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

### கல்வி அமைச்சின் உயர்மட்ட மாநாட்டில் முடிவு

கொழும்பு,டிசெ.20

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் ஆயிரத்து 400 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அனுமதி வழங்கியுள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று நடந்த உயர்மட்ட மகாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளின் பேரில் கல்வி அமைச்சர் ஏற்பாடு செய்த இம் மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன, மாகாணக் கல்வி அமைச்சு செயலர் க.பரமேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன், யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி நிர்வாக சேவை தரம் 3க்கு 22 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.20

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் உள்ள விரிவுரையாளர்களை இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு உள்வாங்கும் திட்டத்தின் கீழ் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 22பேர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தவர்களில் 8பேர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூலமும், 14 பேர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூலமும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் விரைவில் மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம்,டிசெ.20

காலநிலை சீரில்லாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

திருகோணமலைக்கும் - பருத்தித்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டுவந்த இந்தக் கப்பல் காலநிலை சீரில்லாததால் பருத்தித்துறையில் பயணிகளை ஏற்ற இறக்க முடியாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்தச் சேவையை பருத்தித்துறைக்குப் பதிலாக காங்கேசன்துறை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளி வரை இரு விமானச் சேவைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.20

பலாலி - இரத்மலானைக்கு இடையில் இன்றுமுதல் வெள்ளிக்கிழமை வரை இரு விமான சேவைகள் இடம்பெற உள்ளன என்று வட மாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது.

இன்று செல்வதற்காகப் பதிவு செய்தவர்களையும் இன்றைய காத்திருப்போர் பட்டியலில் பதிவு செய்தவர்களையும் இன்று பயண ஏற்பாடுகளுடன் சமுகம் தரும்படியும் -

பயணச்சீட்டைக் கொள்வனவு செய்து அவர்கள் இரண்டாவது சேவையில் செல்லமுடியும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளைய சேவையில் செல்லப் பதிவு செய்தவர்களை இன்று பிற்பகல் சமுகம் கொடுத்து பயணச்சீட்டைக் கொள்வனவு செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது. (இ-3)

## சத்துருக்கொண்டான் தாக்குதலில் சிப்பாய் பலி, மூவர் காயம்

கொழும்பு,டிசெ.20

மட்டக்களப்பு நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சத்துருக்கொண்டான் படைத்தளம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் ரி-81 ரக மோட்டார்களைக் கொண்டு இந்தத் தாக்குதலை ஆரம்பித்தனர் என்றும்-

அதன் பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை படையினர் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(இ-3)

## யுத்தத்தை ஆதரித்து இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,டிசெ.20

யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்துமாறு கோரி இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் எதனையும் நடத்தக்கூடாது. அதேவேளை யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தி விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் எனக்கோரும் மகஜர்கள் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பல்வேறு தரப்பினரிடமும் சமர்ப்பிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க ஐரோப்பிய ஒன்றியம் கோருகிறது

### உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் அறிக்கை

பாரிஸ்,டிசெ.20

இலங்கையின் சிறுபான்மைத் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வு ஒன்றை எட்டுவதற்கு காலதாமதம் இன்றி உடன் பேச்சுக்களை ஆரம்பிக்க சகல தரப்புக்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

ஐரோப்பிய ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸில் நேற்று முடிவடைந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒலிநாடா வெளியீடு

அருட்திரு. ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின்
ஆக்கத்தில் உருவான

**"இது எங்கள் காணிக்கை"**

ஒலிநாடா வெளியீடு

**இடம்** : றோ.க.பாடசாலை, சில்லாலை
**காலம்** : 21-12-2000 வியாழன் மாலை 3.30

அன்புடன் அழைக்கின்றோம்

(81868) - எம்.ஆர்.எஸ்.

## தரம் 6 அனுமதி

### யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

மேற்படி அனுமதிக்காக விண்ணப்பித்த மாணவர்கள் **23.12.2000 சனிக்கிழமை** பிற்பகல் ஒரு மணிக்கு

**1. யா/இணுவில் மத்திய கல்லூரி**

அல்லது

**2. யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

என்பவற்றில், ஒரு பாடசாலைக்கு பெற்றோருடன் வருகை தருதல் வேண்டும். வரும்போது மாணவர்கள்

1. பாடசாலை விடுகைப்பத்திரம்
2. பிறப்புச் சான்றிதழ்
3. அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட புலமைப் பரிசில் புள்ளிவிவரம்
4. பாடசாலைக்கட்டணம்.

ஆகியவற்றைக் கொண்டுவருதல் வேண்டும்.

அதிபர்,
(81869) யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம், 2001 ஆண்டுப் பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும்

காலம் : 27.01.2001 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி (இலங்கை நேரம்)
இடம் : வணிகர் கழகப் பணிமனை

**அன்பான வேண்டுகோள்**

1) ஆராய வேண்டிய விடயங்கள் இருப்பின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 03.01.2001 இற்கு முன் கழகப் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.
2) அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கவும், தெரிவில் இடம்பெறவும் அனுமதிக்கப்படுவார்கள்.
3) நிகழ்ச்சிநிரல் சகல அங்கத்தவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். சகல கழக அங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

*- யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.*

*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/14361)

## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.பல்கலைக்கழக தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைகள் 2000 - 2001 ஆம் கல்வி ஆண்டுக்கு விண்ணப்பித்த மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முகாமைத்துவபீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 82 மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன் கிடைக்காதுவிட்டால் அன்று காலை 8.45 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் கிளையில் தொடர்பு கொண்டால் பரீட்சை எழுதுவதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும் என்று பரீட்சைக் கிளை பதிவாளர் தெரிவித்தார். (ஐ-6)


**லஷ்சுமி சினிமா**
இணுவில்
கடைசி வாரமாக
**சிவா, மோகினி** நடித்த
**ஈரமான ரோஜாவே**
(றீஸ்) காட்சிகள் 10.30, 2.30 (பு.நே.)
22.12.2000 முதல்
துள்ளாத மனமும் துள்ளும்
(81867)

**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், ஜோதிகா, விவேக்
மற்றும் பலரின் நடிப்பில்
**வாலி**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
22.12.2000 முதல்
மின்சாரக் கண்ணா
(C/14247)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், ஜோதிகா நடித்த
S.J.சூர்யாவின்
**குஷி**
தினசரி - 11.00, 2.30 (பு.நே.)
அடுத்த வெளியீடு
சுதந்திரம்
(81866)



Sale Sale Sale

**நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த**
**சீமாட்டியின் மாபெரும் மலிவு விற்பனை!**

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட தரம்மிக்க புத்தம் புதிய ஜவுளித் திவசுகள் என்றும் எங்கும் கிடைக்காத விலையில்

**சீமாட்டி** புடைவைக் கடலில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் ஏற்ற விதம்விதமான கண்ணைப் பறிக்கும் டிசைன்களில் ஜவுளிகள், றெடிமேட் ஆடைகள் எண்ணம் போல தெரிவு செய்திட நாடவேண்டிய ஒரே இடம்:-

**சீமாட்டி புடைவைக் கடல்**

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள், கூறைச் சேலைகள், பட்டுவேட்டிகளின் கைராசியான ஒரே நிறுவனம்.

**சீமாட்டி புடைவைக் கடல்**

**122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்**

இதே மலிவு விற்பனை எமது ஒரே கிளை நிறுவனமான

**மங்கை சில்க்**

**15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

என்ற புடைவை அகத்திலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

Sale Sale Sale
(C/14357)


கைகொடுத்தல் நிகழ்வில்.......

குழந்தை ம.சண்முகலிங்கத்தின்

**ஆரோடு நோவேன்**

(நாடகம்)

இன்று மாலை 3.30 மணி (20-12-2000)
கைலாசபதி கலையரங்கில்
பிரவேசம்:- இலவசம்

வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியம்,
(81870) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி வித்தியா குகன்

பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சபையின் உறுப்பினர்

**திரு.சண்முகசுந்தரம் குகன்**

அவர்களின் பாரியார்

**திருமதி வித்தியா குகன்**

அவர்கள் 18.12.2000 அன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பன்றிக்கோட்டுப்*
*பிள்ளையார் கோயில்*
*கே.கே.எஸ். றோட்,*
*யாழ்ப்பாணம்.*

- தர்மகர்த்தா சபை

(81871)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிமுத்து தம்பிராசா

(ஓய்வுபெற்ற எஸ்ரேற் சுப்பிறிண்டன்ட் மலேசியா, தெல்லிப்பழை, புற்று நோய் வைத்திய சாலையின் ஸ்தாபகர், ஊரெழு விநாயகர் ஆலய போஷகர்)

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து தம்பிராசா நேற்றுமுன்தினம் (18.12.2000) திங்கட்கிழமை இரவு 10 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து - சின்னத்தங்கம் தம்பதிகளின் மகனும், பரிபூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, தம்பிஐயா, தம்பியப்பா மற்றும் தம்பிநாதன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் ஊரெழு மாணிக்கம் - கனகம்மாவின் மருமகனும் கமலாவதி (கனடா), சற்குணமலர் (ஹொங்ஹொங்), தருமராசா, தவராசா (கனடா), காலஞ்சென்ற சந்திரவதி, Dr.கிருஷ்ணர் மற்றும் இந்திரவதி (லண்டன்), காலஞ்சென்ற பரமசிவம், சாம்பசிவம் மற்றும் மகாசிவம் (இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர்), குகவதி (கனடா), திலகவதி, திருவருட்செல்வன், தேவி, காலஞ்சென்ற Dr.சுமந்திரன் மற்றும் பகீரதன் (லண்டன்), தனலட்சுமி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊரெழு கிழக்கு பூரணவாசா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரெழு பொக்கணை மயானத்துக்கு இன்று (20.12.2000) புதன்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பூரணவாசா"*
*ஊரெழுகிழக்கு, சுன்னாகம்.* (81859)

தகவல்
***மனைவி.***

### வேதமுத்து அற்புதம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த வேதமுத்து அற்புதம் நேற்று (19.12.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதமுத்து - நம்பிக்கை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான வில்லியம், பிலிப்பு, சாமுவேல், மரியதாஸ் ஆகியோரினதும் ஞானப்பூ, திரேசம்மா, சூசைதாஸ், அன்னலட்சுமி, எலிசபெத் ஆகியோரினதும் அன்புச் சகோதரனும் மேரி யோகராணி (ஆசிரியை - யா/உரும்பிராய் றோ.க.த.க.), நிக்கலஸ், றொசான் ஆகியோரினது மாமனாரும் பற்றிக் நிர்மலன், பற்றிக் ரஜனிகாந், டனிஸ்ராஜ், ஸ்ரீபன்ராஜ் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை புனித மிக்கேல் தேவாலயத்தில் இன்று (20.12.2000) புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (81874)

***தா.மேரி யோகராணி (மருமகள்)***

### திருமதி வித்தியா குகன் (சுதுமலை)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வித்தியா குகன் கொழும்பில் காலமானார்.

அன்னார் குகனின் (மருத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) அன்பு மனைவியும் தக்ஷினி, ஜசிந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவராசா - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம் - சிவகாமசுந்தரி தம்பதிகளின் மருமகளும் விக்னராசா (டுபாய்), விமலராசா (அக்றோ தொழிற்பேட்டை - கோண்டாவில்), நிர்மலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாலகுமார் (பிரதம தபாலகம் - யாழ்ப்பாணம்), சுந்தரமணி (கொழும்பு), தயாளினி (நீர்வேலி), அழகிரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் மதுசூதன், லாவண்யா, அபிராமி ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும் கோணேஸ்வரன், சத்தியபாமா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2000) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் சுதுமலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மதவடி லேன்,*
*சுதுமலை வடக்கு,*
*சுதுமலை.* (81872)

தகவல்:
***ச.குகன் (கணவர்)***

# உதயன்

## முரண்பாடும் சந்தேகமும்

உதவி வழங்கும் நாடுகளில் இருந்து எவ்வாறேனும் பெருந் தொகையான நிதி உதவியைப் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்துடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாரிஸ் மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்தி இருக்கிறார். அது எதிர்பார்க்கப்பட்டதே; தவறு என்று சொல்வதற்கில்லை.

ஆனால், அவரது பேச்சு, கூடுதல் நிதிக்கான தேவைகளை முன் வைப்பதற்குப் பதிலாக, ஒரு வகையில் பிரசார வடிவமும் கொண்டிருக்கிறது. அதனால், ஒன்றுக்கு மற்றது முரணான கருத்துக்கள் ஜனாதிபதியின் உரையில் பரவிக் கிடக்கின்றன!

நாட்டின் பொருளாதார வளர்ச்சி கருதி, போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளதாகக் கூறிய அவர், விடுதலைப் புலிகளின் இணக்கத்துடனோ, அவர்களின் இணக்கம் இன்றியோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு சமாதானத் தீர்வைக் கொண்டு வராவிடில், அவர்கள் போரை நிறுத்தமாட்டார்கள். அரசாங்கத்துக்கும் போரை நிறுத்தும் சிந்தனை இன்னும் பிறக்கவில்லை. போரையும் நடத்திக் கொண்டு பேச்சுக்களை நடத்தலாம் என்று அரசு அறிவித்திருப்பது அதனையே காட்டுகிறது.

அவ்வாறாயின், பொருளாதார வளர்ச்சி கருதிப் போரை முடிவுக்குக் கொண்டு வருவது எவ்வாறு? அதற்கான சாத்தியமானதும், சாதகமானதுமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும் உண்டு. அதனை மறந்த நிலையில் ஜனாதிபதி இருப்பத்தைந்து வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் பேசியுள்ளார்.

அடுத்து—

நோர்வே நாட்டின் முயற்சியினால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது. கடந்த ஒரு வருட காலமாக பெருமுயற்சி எடுத்ததன் பெறுபேறாகவே இந்தச் சாதக நிலை தோன்றியுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

எனினும் நிபந்தனை எதனையும் விதிக்காமல் தாம் பேச்சுவார்த்தைக்கு வருவதாக விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும் என்று கேட்கிறார். நிபந்தனை இல்லாமலே பேசுவதற்குத் தயார் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் தமது மாவீரர் பேச்சில் குறிப்பிட்டு, இருபது நாள்கள் கழிந்தாயிற்று.

மேலும்—

அரசாங்கப் படைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறினாலேயே பேச்சுக்கு வரமுடியும் என்று விடுதலைப் புலிகள் நிபந்தனை விதிக்கக் கூடும் என்ற ''அச்சமும்'' ஜனாதிபதிக்கு உண்டு போலும். அவரது பேச்சின் ஒரு கட்டத்தில் அந்தச் சந்தேகத்தையும் கிளப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு கடந்த சனிக்கிழமை லண்டன் அலுவலகத்தில் இருந்து வெளியிட்ட அறிக்கையில், தாம் அவ்வாறு கேட்கவில்லை என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். பிரான்ஸில் இருந்ததால் ஜனாதிபதி அதனை அறியவில்லையோ என்னவோ!

இவ்வாறான சந்தேகங்களும், முரண்பாடுகளும், நம்பிக்கையின்மையும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரசுக்கு அக்கறை, உண்டா என்ற கேள்வியை உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளின் மனங்களிலும் எழுப்பியிருக்கும்.

## உதவிப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுகள் யாழ். பிரதம தபாலகத்தால் வழங்கப்படுகின்றன.

யாழ். பிரதம தபாலகத்தில் பதிவுகளை மேற்கொண்டு முன்னர் எடுத்தவர்களுக்கு ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குமான கொடுப்பனவுகள் வந்துள்ளன என்றும் உரியவர்கள் தமது கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுக்கொள்ளுமாறும் யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-6]

## கிறிஸ்மஸ் ஒளிவிழா

கொழும்புத்துறை, டிசெ. 20

யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் எதிர்வரும் 28 ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 'கிறிஸ்மஸ் ஒளிவிழா' நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'குடிலின் கானங்கள்' என்னும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஐ-30)

### ஜனாதிபதி மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்:

# ஒரு வருட காலம் கடந்த நிலையிலும் விசாரணை முடிவடையவில்லை!

## நீதிவான் விசனம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்று ஒரு வருடம் பூர்த்தியான போதிலும் விசாரணைகளில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

கொழும்பு பிரதம நீதிவான் ஜீ. டி. குலதிலக மேற்கண்டவாறு விசனம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்ற சமயம் இந்தப் படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளில் இறுதியான முடிவுகள் எதனையும் எட்டிவிடவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு இன்ஸ்பெக்டர் பீ. சந்திரதாச தெரிவித்தார்.

விசாரணைகளின் குழு அறிக்கையும் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக்குழு நியமிக்க வேண்டும் என்று நீதிவான் தெரிவித்தார்.

நீதிவான் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பொலிஸாரின் அறிக்கையும் உள்ளடக்கத்தில் விரிவாக உள்ளது ஆனால் பெறுபேறுகள் சிறிதளவே இருக்கின்றன.

ஒரு முழு வருடம் முடிந்துவிட்டது. மூத்த விசாரணை அதிகாரிகள்பலரும் பட்டதாரிகளாக உள்ளனர். அவர்கள் தமது திறமையினால் இந்தப் புலன் விசாரணையைத் துரிதப்படுத்தியிருக்க வேண்டும்.

இந்த நிலையில் பொலிஸ் திணைக்களத்தினரின் பயிற்சித்திறன், கணனி வசதி ஆகியவற்றை மேம்படுத்துவது பற்றி ஆராய வேண்டும்— என்றார். (இ.3)

## அகண்ட நாம பஜனை

யாழ்ப்பாண, டிசெ. 20

நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி ஏற்பட வேண்டிக் கடந்த ஒக்ரோபர் 9 ஆம் திகதி முதல் நவம்பர் 22 ஆம் திகதி வரை 45 நாள்களுக்குப் பிரார்த்தனையில் ஈடுபட்டு வந்த சாயி அன்பர்கள் ஒன்றுகூடி அகண்டநாம பஜனை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துச் சாயி பஜனை நிலையங்களும் இணைந்து அகண்டநாம பஜனையை நிகழ்த்தவுள்ளன.

சாயி அன்பர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் சாயி சமித்தியினர் ஆன்மீக இணைப்பாளர் கேட்டுள்ளனர். (ம)

# சேவைக் கட்டணத்தை அதிகரிக்க கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரண விநியோக சேவைக் கட்டணத்தை மேலும் உயர்த்த வேண்டும் என்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தியிடம் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் உட்பட சமாச இயக்குநர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

எரிபொருள் செலவு, சம்பள உயர்வு போன்ற காரணங்களினால் தற்போதைய சேவைக் கட்டணத்தை ஒரு ரூபா 50 சதத்தில் இருந்து இரண்டு ரூபா 50 சதமாக உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் சுன்னாகம், அளவெட்டி, மானிப்பாய், கைதடி, பளை, பருத்தித்துறை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் வேலணை, கட்டைவேலி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்கள் உட்பட கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ—17)

# பண்பாடு பேணும் அமைப்புக்களை போற்றிப் பாதுகாக்க வேண்டும்

## அடிக்கல் நடும் வைபவத்தில் உரை

வலிகாமம் மேற்கு, டிசெ. 20

பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்கின்ற அமைப்புக்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கம் எமது கலை கலாசாரத்தை பாதுகாத்து வருகின்றது. இச் சங்கத்தின் செயற்பாடுகள் அதிகரிக்க வேண்டும்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ. பி டி. பி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன், சித்தன்கேணியில் அமைந்துள்ள சிலத்திருஅம்பலவாணர் வளாகத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்தின் புதிய மண்டபத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

புதிய மண்டபத்துக்கான அடிக்கல் நடும் விழா புலவர்மணி அ. ஆறுமுகம் தலைமையில் கடந்த 11ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல்4. 30 மணியளவில் இடம்பெற்றது. அடிக்கல் நடும் விழாவை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பேராசிரியர் கலாநிதி சு. ஜெபநேசன் ஆகியோர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

ந. திரிலோகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டடத்துக்கு 10 இலட்சம் ரூபா நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் கா. வே. குகேந்திரன், அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் உதவியுடன் ஒதுக்கிக் கொடுத்து இலங்கையிலேயே தமிழை வளர்ப்பதற்குரிய வசதிகளும் கொண்ட சங்கமாக தமிழ்ச்சங்கத்தை செயற்பட வைப்பேன்.

நாட்டை விட்டு தமிழர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்று வெளிநாடு செல்பவர்கள் ஒரு காலத்தில் நாட்டுக்குத் திரும்பி வரும் போது அவர்களால் அந்நியக் கலாசாரம் எமது கலாசாரத்துடன் கலந்து விடும் ஆபத்து உள்ளது. பண்பாடு, கலாசாரம் நலிவடைந்தால் எமது இனம் அழிந்து விடும். எனவே நாம் எமது மொழியையும் கலாசாரத்தையும் கட்டிக் காப்பது அவசியம்.

தமிழ்ச் சங்கத்தின் பெரும் தூண்களாக வலி. மேற்கில் உள்ள பண்டித மணிகள் திகழ்கிறார்கள். புலவர்மணி அ. ஆறுமுகம், பண்டிதர் கடம்பேசுவரன் ஆகியோர் தமிழுக்கு அளப்பரிய சேவை ஆற்றி உள்ளனர் — என்றார்.

வித்துவான் க. சொக்கன் தனது வாழ்த்துரையில் கூறியதாவது:-

தமிழ் மொழி இன்று பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக மட்டத்தில் கூட சரிவரக் கவனிக்கப்படவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சகல மாணவர்களும் சரியான இலக்கணம் இன்றியும் சொற்றொடர் வாக்கியங்கள் இன்றியும் தமிழைக் கையாண்டு வருகின்றனர்.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தமிழ்ச் சங்கம் யாழ். மாவட்டம் முழுவதும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு தமிழ் மொழியை நன்கு பேசவும், எழுதவும் வகுப்புக்களை நடத்துவதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கம் முன்வர வேண்டும்— என்று — தெரிவித்தார்.

பேராசிரியர் கலாநிதி சு. ஜெபநேசன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்மொழியை சமய வேறுபாடின்றி சகலரும் முன்னைய காலத்தில் வளர்த்து வந்தனர். தமிழ்மொழி பேச, எழுத இனிய மொழியாகும்— இன்று பலதரப்பட்ட பிரச்சினைகளினால் தமிழ் மொழியை சரியாக எம்மவர் களினால் கற்க முடியாது இருக்கின்றது. இதனால் மாணவர்கள் சரியான இலக்கணம் இன்றி தமிழை எழுதுகின்றனர்.

இந்தநிலை மாறவேண்டும். எமது தமிழ்மொழியை வருங்காலத்தில் எல்லோரும் நல்ல முறையில் கற்க வேண்டும். இதற்கான சகல ஆரம்ப நடவடிக்கைகளையும் தமிழ்ச் சங்கம் மேற்கொள்ள வேண்டும். இன்று யாழ். மாவட்டத்திலேயே முன்னோடியாகத் திகழும் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்திற்கு சொந்தக்கட்டடம் அமைவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்ச் சங்கத்திற்குத் தேவையான நூல்களை அன்பளிப்புச் செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் நான் மேற்கொள்வேன்.

இந்த நூல்களை இப்பகுதி மக்கள் மட்டுமல்லாமல் கூடா நாட்டுமக்கள் எல்லோரும் கற்று எமது தமிழ்மொழியை வளர்க்க வேண்டும் — என்றார்.

சைவப்புலவர் வ. கந்தசாமியும் வாழ்த்துரை வழங்கினார். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்த பரமாசாரிய சுவாமிகள், பேராசிரியர் கலாநிதி சு. ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். இறுதியில் பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் நன்றியுரை கூறினார். (ம-175)

### உதயவாக்கு

நாங்கள் புரிய விரும்பும் பாவத்தைக் கேட்க விரும்புபவர் ஒரு சிலர்தாம்.

- ஷேக்ஸ்பியர்

## நாளை

மார்கழி 06

வியாழக்கிழமை

திதி : துவாதசி

முன் இரவு 8.02 வரை.

நட்சத்திரம் : சுவாதி

முன் இரவு 11.20 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம் : 7.55 - 9.25

ராகுகாலம் : 1.55 - 3.25

(பகலுக்கும் இரவுக்குமான பழைய நேரப்படி)

## வீடுகள் விற்பனைக்கு

யாழ் நகரில் நான்காம் குறுக்குத் தெருவில் TRRO வுக்குப் பக்கத்தில் சகல வசதியுடனும் மிகவும் நல்ல நிலையில் உள்ள இரண்டு வீடுகள் உடன் விற்பனைக்கு உண்டு. இரண்டினதும் விலை ரூபா 18 லட்சம். பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு:-

R. V. கந்தசாமி
70, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (81640)

## போரூட்

### வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள் அலகு

போரூட் நிறுவனம், தம்பசிட்டி, பருத்தித்துறை.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 30-12-2000**
சனிக்கிழமை காலை 9.00 மணி

- கலை முதற் தேர்வு — 2001
- வணிக முதற் தேர்வு — 2001
- B. Com. Part-I / Part II

(81812) - நிர்வாகத்தினர் -

## புறோயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பில் இருந்து சுத்தம் செய்யப்பட்ட பிறிமா புறோயிலர் கோழி இறைச்சி தினமும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

T. கரன்
யாழ். முட்டை விற்பனை நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பாம்
59, சினிவாசகம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம். (81807)

## வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.

### கிளைக் குழு உறுப்பினர்

தெரிவு தொடர்பான

## அறிவித்தல்

15—12—2000 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் நான்காம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிக்கப்பட்ட இடங்களில் கிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் 24—12—2000 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். குறித்த கூட்ட அறிவித்தல்கள் கிளை அங்கத்தவர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாத அங்கத்தவர்கள் தங்கள் அறிவித்தல்களைச் சம்பந்தப்பட்ட கிளைகளில் முகாமையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அ. க. த. கிருஸ்ணராசா
தலைவர்.

செ. யோகேஸ்வரநாதன்
பதில் செயலாளர்.

[சி/14355]

## மூன்றாண்டு நெஞ்சை விட்டகலா நினைவலைகள்



இரத்தில் 01 — 10 — 1952

பரத்தில் 23 — 12 — 1997

திருமதி
### இரத்தினசிங்கம் லீலா

திதி: 20-12-2000

''பூத்த புத்தாயிரமாண்டில் புவியில் நீங்கள் இல்லையம்மா
காக்கும் இறைவன் கழல்கள் சேர்ந்திர்கள் பெறுவீர்கள் அமைதி பெறுகவே''

குடும்பத்தினர்.

287, விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (81844)

## நிறுத்தல் உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி

கொழும்புத்துறை, டிசெ. 20

யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தில் பிரதி புதன்கிழமைகள் தோறும் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நிறுத்தல், அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ—30)

## மற்றும் ஒருவருக்கு டெங்கு அறிகுறி

ஊர்காவற்றுறை, டிசெ. 20

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கு டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பரிசோதனையின் போது அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மேரி றெஜினா (வயது - 18) என்பவருக்கே டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-16)

## இராஜகோபுரம் அமைப்பு

கொழும்புத்துறை, டிசெ. 20

சண்டிலிப்பாய் - சீரணி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயிலில் புதிய இராஜ கோபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

65 அடி உயரமான இக் கோபுரம் 5 நிலைக் கோபுரமாகும். (ஐ-30)

## தொல்புரம் மத்தி முன்பள்ளிக்கு உபகரணங்கள்

கொழும்புத்துறை, டிசெ. 20

தொல்புரம் மத்திய சன சமூக நிலைய வாசிகசாலையின் கீழ் இயங்கும் தொல்புரம் சக்தி முன்பள்ளி சிறுவர் பாடசாலைக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் விளையாட்டு உபகரணங்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் வைத்து இவை வழங்கப்பட்டதாக நிலையச் செயலாளர் கி. ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

## ஆரையம்பதியில் கோஷ்டி மோதல்

மட்டக்களப்பு, டிசெ. 20

மட்டக்களப்பு மாவட்டம் — ஆரையம்பதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்றில் 3 இளைஞர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ம-7-21)

## இருவரையும் வாழ்த்துகின்றேன்

சமாதான நீதிவான்
பொன். குகநாதன்
B. SC. அவர்களையும்,

நவாலியில்
முதலியார் குளம் அமைத்த
''விவசாய வித்தகர்''
சி. பொ. வ. ம. க.
முதலியார்
அவர்களையும்
பாராட்டுகின்றேன்.

– செ. ரமேஷ்
LGA - நவாலி.

(சி-14353)

## G. A. Q., 1ST in Com.

### (யாழ். பேராதனை)

(வெளிவாரி பட்டப்படிப்புக்கள்)

★ மேற் குறிப்பிட்ட பட்டப் பாடநெறிக்கான பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்துகொள்ளலாம்
★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
★ விண்ணப்பித்தல், பாடநேர அட்டவணை தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு: S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ். (81856)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திக்கு
பல்வேறு வழிகளிலும் சேவை புரிந்து,
எமக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க
உறுதுணை வழங்கிய

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும்,
வடக்கு — கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான,
**கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா,**

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. வி. கே. குகேந்திரன் (ஜெகன்),**

வடமராட்சி கிழக்குப் பிரதேச சபைத் தலைவர்
**திரு. ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன்,**

உப-தலைவர்
**திரு. ப. ரவீந்திரன் (ராசீக்)**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன்,
மேலும், எமது வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் முழுமையான அபிவிருத்திக்கு, அர்ப்பணிப்புடன் உங்கள் சேவையை வழங்குவீர்களென ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு.
சமுர்த்தி உத்தியோகத்தர்களும்,
ஊக்குவிப்பாளர்களும்.

மருதங்கேணி. (81850)

## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், [மாகாணம்] யாழ்ப்பாணம்

1. வல்வெட்டித்துறை, நகராட்சி மன்ற மீன் சந்தைக் கட்டடம் (கட்டம் 1) வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2001 ஆம் ஆண்டு தை மாதம் 09 ஆம் திகதி முற்பகல் 10 30 மணிவரை, யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தரம் எம் — 8 இலும் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுகள் செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்டதுமான விவரங்கள் அடங்கிய பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்,
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். மீளளிக்கப்படும்கேள்விவைப்புப் பணம் ரூபா14, 300ஐயும், மீளளிக்கப்படாதகேள்வி வைப்புப்பணம் ரூபா 500 ஐயும் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு தை மாதம் 02 ஆம் திகதி பிற்பகல் 4. 45 மணிவரைநிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம்அலுவலகத்தில்பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

எந்திரி. இ. சிறீகாந்தா
பிரதம பொறியியலாளர்.

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (சி/15359)

# புலிகள் மீதான தடை குறித்த பிரிட்டனின் முடிவுக்கு ஒரு வருடம் காத்திருக்க வேண்டும்

## பிரிட்டிஷ் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.20

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக பிரிட்டனில் அமுலுக்கு வர உள்ள உத்தேச சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகளை பிரிட்டனில் தடை செய்வது குறித்த முடிவை அறிவதற்கு இலங்கை அரசு ஒரு வருட காலம் காத்திருக்க வேண்டும் என்று கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசு பிரிட்டனுக்குக் கொடுத்து வரும் அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே பிரிட்டிஷ் தூதரகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கம் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை பிரிட்டனில் தடை செய்யும் என்று இலங்கை எதிர்பார்ப்பதாகவும் -

அவ்வாறு தடை செய்ய பிரிட்டன் மறுத்தால் இரு நாட்டு உறவுகளும் பாதிக்கப்படும் என்றும் -

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

எந்தவொரு காரணத்துக்காகவும் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடைசெய்யாவிட்டால் அந்த நாட்டுடனான உறவுகளில் கணிசமான அளவு விரிசல் ஏற்படும் என்பதை தெளிவாகக் கூற விரும்புகிறேன். பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இடம்பெறுவதற்கு புலிகளுக்கு சகல தகுதிகளும் இருக்கின்றன என்றும் கதிர்காமர் அப்பேட்டியில் மேலும் கூறியிருந்தார் -

இதன் தொடர்ச்சியாகவே பிரிட்டிஷ் தூதுரகத்தின் பதில் அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசு தமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியுள்ளது. ஆனால் எந்தக் குழுக்கள் மீது தடைகள் விதிப்பது என்ற விடயம் தொடர்பான தீர்மானம் அடுத்த வருடமே எடுக்கப்படும் என்று பிரிட்டிஷ் தூதரக பேச்சாளர் அலிசன் கெம் கூறியுள்ளார்.

இதேவேளை - நேபாளத்துக்கு விஜயம் செய்துள்ள கதிர்காமர் பிரிட்டிஷ் வெளியுறவு இணை அமைச்சர் பீற்றர் ஹெய்ன் அண்மையில் கொழும்பு வந்துள்ள போது தெரிவித்துள்ள கருத்துக்களையும் கடுமையாகச் சாடியுள்ளார்.

எமது சொந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமக்கிருக்கும் உரிமையைப் பறிக்கும் விதத்திலான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாம் என்று தமது வெளிநாட்டு நண்பர்களைக் கேட்டுக் கொள்வதாகவும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

வட அயர்லாந்தில் உள்ள ஐரிஷ் குடியரசு இராணுவம் போன்ற ஓர் அமைப்பே விடுதலைப் புலிகள் அமைப்பும். அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் இலங்கை பிரிவதை அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய நாடுகள் போன்றவை அங்கீகரிக்காது. ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்கும் என்று பீற்றர் ஹெய்ன் முன்னர் தெரிவித்திருந்தார். (ம)

### மீனவ குடும்பங்களுக்கு காணி

வலிகாமம் மேற்கு,டிசெ.20

அராலி மத்தியிலுள்ள ஏழு ஏக்கர் அரச காணி நிலமற்ற வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் நா.வேதநாயகன் மேற் கொண்டுள்ளார்.

அரச காணியை அறவீடு செய்து காணியற்ற வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மீனவ குடும்பங்களுக்கு வழங்குவதற்கு காணிப் பயன்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### இலவச மருத்துவ சேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையில், வடமராட்சி கிழக்கிலுள்ள நடுக்குடத்தனையில் இலவச பொது மருத்துவ சேவை எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுத் தலைவர் டாக்டர் எஸ்.தியாகராசா தலைமையில் இந்த இலவச மருத்துவ சேவை நடைபெறும். (ஐ-109)



சங்கரத்தை, பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு மடைப்பள்ளி கட்டுவதற்கு, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கா.வே.குகேந்திரன் (ஜெகன்) தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கி உள்ளார்.

மடைப்பள்ளிக்கான அத்திவாரக் கல்லை வலி மேற்கு பிரதேச சபைத் தலைவரும், வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான பீ.திரிலோகநாதன் நட்டுக் கட்டட வேலைகளை ஆரம்பித்து வைத்தார். அத்திவாரக்கல் நடும் வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படத்தில் ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த என்.ஜெயரஞ்சிதன் (ச.நீ), ஆலயப்பூசகர் ராதா ஆகியோரும் காணப்படுகின்றனர். (அ)

# விட்டுக் கொடுப்புகளுக்கு இரு தரப்பினரும் தயாராக வேண்டும்

## ஐ.தே.க பேச்சாளர் கூறுகிறார்

பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு உண்மையான தீர்வு காணப்பட வேண்டும் என்று அரசும் விடுதலைப் புலிகளும் உண்மையில் விரும்பினால் இரு தரப்புக்களும் விட்டுக் கொடுப்புகளுக்குத் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு ஐ.தே.க பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிபந்தனை எதுவும் இல்லாமல் இரு தரப்பும் திறந்த மனத்துடன் பேச வேண்டும் என்பதே ஐ.தே.கவின் நிலைப்பாடு.

நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயார் என்று முன்னர் தெரிவித்த இரு தரப்பினரும் இன்று பரஸ்பரம் இறுக்கமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

தமக்குள் நிபந்தனைகளை ஒளித்து வைத்தே இரு தரப்பும் பேச்சுக்கு முன்வந்துள்ளன என்பது இப்போது தெரிகிறது. அவையே சிறிது சிறிதாக வெளி வருகின்றன.

கால அட்டவணையுடன் நிபந்தனை அற்ற பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எமக்குத் தெரியாமலேயே அரசும் - புலிகளும் - நோர்வே அரசும் சமாதானம் குறித்துப் பேசி வந்தன. பின்னர் சமாதானப் பேச்சுக்கள் குறித்து புலிகள் அறிவித்தனர். அரசு அதற்கு தமது பிரதிபலிப்பைக் காட்டியது. தற்போது மீண்டும் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

எனவே இரு தரப்பும் விட்டுக் கொடுப்புகளுக்கு முன்வந்தால் மட்டுமே பேச்சு என்பது சாத்தியமாகும்.

இப்போது இரு தரப்புகளும் வெளியிட்டுவரும் கருத்துக்கள் சமாதான முயற்சிகளுக்குச் சாதகமானவையாகத் தெரியவில்லை.

இப்படி அவர் மேலும் சொன்னார். (ம)

# கடன் திட்டங்களை அமுல் செய்ய பொது அமைப்புகளுக்கு நிதி

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் சுழற்சிமுறைக் கடன்திட்டத்தினை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள சமூகமட்ட அமைப்புகள் செயற்படுத்த வேண்டும் என்ற கொள்கைக்கு இணங்க வலிகாமம் மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினரால் 5லட்சத்து 16 ஆயிரத்து 95ரூபா சமூக அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்களுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்ய சுழற்சி முறையில் கடன் வழங்குவதற்காக சுளிபுரம் மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் அராலி கிழக்கு, தெற்கு ஐயனார் கடற்தொழிலாளர் சங்கத்திற்கு 89 ஆயிரத்து 595 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற பெண்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு சுழற்சி முறையில் கடன் வழங்குவதற்கு பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 88ஆயிரத்து 375 ரூபாவும் -

சங்கானை மேற்கு அம்பாள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 62 ஆயிரத்து 500 ரூபாவும் -

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் -

அராலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் -

சங்கரத்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 45 ஆயிரத்து 625 ரூபாவும் -

வழங்கப்பட்டுள்ளது.

சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ள கடனை அந்தந்த சங்கங்களில் அங்கத்தவர்களாக உள்ளவர்கள் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். (ஐ-175)



யாழ். கல்வியியல் கல்லூரியினரால் அனுஷ்டிக்கப்பட்ட நூலகவாரத்தையொட்டி யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினரால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் பொறுப்பாசிரியர்களிடம் கையளிக்கப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படம் இது. (ஐ)



கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பாலர் பாடசாலைச் சிறுவர்கள் கண்கவர் உடற்பயிற்சியில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் க.குணராசா கலந்து கொண்டார். (ஐ)


நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு ராசி சில்க்ஸில்
அனைத்து ரக புடைவைத் தினுசுகளும்
மலிவு விற்பனையில்

கபமுகூர்த்த பட்டுப் புடைவைகள் உட்பட இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன சாறி வகைகளும்.
✳ நங்கையர் விரும்பும் ஸ்கேட் அவ் பிளவுஸ், புறக்ஸ், பினபோம், சல்வார் கமிக்ஸ், சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளுக்கும் ✳சாறிகளுக்கான பிளவுஸ் துணிகளுக்கும்

ராசி சில்க்ஸ்

70,71A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

NEW SAREES:-

COLLEGE GIRL
RACHNA SAREES
DOLLAR - 2000
ORESA SILK
APOORVA SILK

ELPASSO
ROXY (COTTEN)
FUN FAIR
SWEET CHOSIE
MARRIAGE GIFT
MILENIUM - 2000

PEACOCK SILK
VIJAY SHAREE
SUN SILK
PRITI (COTTEN)
SHAGUN - 2000

அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்

ராசி சில்க்ஸ்

70,71A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி14360)

# அரசின் 100 ஆம் நாள் பூர்த்தியன்று சபையில் ஐ.தே.கட்சி பிரேரணை

கொழும்பு,டிசெ.20

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு இரண்டாவது தடவையாக ஆட்சிப் பொறுப்பேற்று எதிர்வரும் 27 ஆம் திகதி 100 நாள்கள் பூர்த்தியாகவுள்ளன. அன்றையதினம் நாடாளுமன்றில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர பொலீஸ் ஆணைக்குழு, சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழு, சுதந்திர பொதுச்சேவை ஆணைக்குழு ஆகிய நான்கு ஆணைக்குழுக்களையும் உடனடியாக நியமிக்கக் கோரும் பிரேரணையையே ஐ.தே.க கொண்டுவரவுள்ளது.

பொ.ம.ஐ.முன்னணி அரசு பதவி ஏற்றதும் மூன்று மாதங்களுக்குள் இந்த ஆணைக்குழுக்களை அமைப்பதாக உறுதியளித்திருந்தது. இதன் அடிப்படையில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவது என்று ஐ.தே.கட்சியும் முடிவு செய்திருந்தது.

ஆனால் இதுவரை அரசு இந்த ஆணைக்குழுக்களை அமைக்க எதுவித நடவடிக்கையையும் எடுக்காமல் காலந்தாழ்த்தி வருவதாக ஐ.தே.க குற்றஞ்சாட்டியுள்ளது.

புதிய பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஆளுங்கட்சித் தரப்பு எம்.பிக்கள் சிலரது ஆதரவைப் பெறுவதற்காக ஐ.தே.கட்சியினர் அவர்களுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. (ஐ-3)

# யுவதி மீது பாலியல் வல்லுறவு; சந்தேகத்தில் சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம்,டிசெ.20

புத்தூர் நிலாவரையைச் சேர்ந்த 32 வயது யுவதி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்து சிப்பாய் ஒருவர் அச்சுவேலிப் பொலீஸாரால் யாழ்.நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட அச்சுவேலிப் பொலீஸார் சிப்பாயைக் கைது செய்துள்ளனர்.

யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அணி வகுப்பில் பிரஸ்தாப சிப்பாயை அந்த யுவதி அடையாளம் காட்டினார்.

அதைத் தொடர்ந்து இந்த யுவதியின் மருத்துவப்பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்ட நீதிவான், சிபபாயை அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பணித்தார். (ஐ-3-6)

## இலங்கை - இந்திய கடற்படைகள் கூட்டு ரோந்து

புதுடில்லி,டிசெ.20

இந்துசமுத்திரத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை - இந்தியக் கடற்படைகள் கூட்டு ரோந்துப் பணியை ஆரம்பிக்கவுள்ளதாக இந்திய கிழக்குப் பிராந்தியக் கடற்படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல்சிஸில் திசேரா அந்நாட்டின் முப்படைத் தளபதிகளையும் சந்தித்து இந்து சமுத்திரத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தொடர்பாகவும் - இந்தியாவின் மேற்குக்கரை ஊடாக வன்னிக்கு எரிபொருள்கள் மற்றும் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கடத்தி வருவது குறித்தும் - பேச்சு நடத்தியிருந்தார்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்வதாக இந்தியக் கடற்படைத் தளபதி சிஸில்குமார் உறுதியளித்திருந்தார்.

இலங்கை - இந்தியக் கடற்படையினருக்குச் சவாலாகஅமைந்துள்ள கடற்புலிகளின் செயற்பாடுகளை முற்றாகத் தடுப்பதற்கே இந்தக் கூட்டு ரோந்துப் பணிக்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக இந்தியக் கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-8)

## கொலை குறித்து விசாரணைக்கு உத்தரவு

வவுனியா,டிசெ.20

வவுனியா மாவட்டம் மணியர்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த சனியன்று படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் நேற்றுமுன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கணபதிப்பிள்ளை செல்வராஜா (வயது42) என்பவரே கடந்த சனியன்று ஆயுதம் தாங்கிய இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டுப் பின்னர் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்தப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமயமே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மணியர்குளம் பகுதியில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்புக்கு அந்தப்பகுதியில் உள்ள இராணுவத்தினரே பொறுப்பு.வவுனியா மாவட்ட நீதிமன்றும் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றும் ஆகியவற்றில் உள்ள காணி வழக்கு ஒன்றுடன் தொடர்புடையவர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தப்படுகொலை தொடர்பாக மூன்று அரச அதிகாரிகள் மீது நீதிமன்றில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே படுகொலை தொடர்பான விசாரணைகளை உடன் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடுகிறேன் - என்று நீதிபதி தெரிவித்துள்ளார். (ஐ-7-164)

## கொடிகாமம் நகர் வழமைக்கு

தென்மராட்சி,டிசெ.20

கொடிகாமம் நகரப்பகுதி வழமைக்குத் திரும்பியுள்ளது. வடமராட்சி கொடிகாமத்திற்கான வாகன சேவைகளும் வழமைபோல் நடைபெறுகின்றன.

கொடிகாமம் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததையடுத்து முள்ளியூடாகச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை கடந்த ஞாயிறு காலை 11.00 மணிக்கு நீக்கப்பட்டதையடுத்து போக்குவரத்துக்கள் வழமை நிலைக்குத்திரும்பின. (ம-117)

## சட்டவிரோத குடியேற்றவாசிகளில் 45 தமிழர்கள் உட்பட 71 பேர் இத்தாலியில் தங்க அனுமதி

இத்தாலி நாட்டினுள் சட்ட விரோதமாக நுழைய முற்பட்ட சமயம் இத்தாலிப் பொலீஸாரினால் அண்மையில் கைது செய்யப்பட்ட 124 பேரில் 45 தமிழர்கள் உட்பட71 பேருக்கு இத்தாலிய குடிவரவு - குடி அகல்வுத் திணைக்களம் ஒரு வருடத்துக்குச் செல்லுபடியாகக்கூடிய அகதி அந்தஸ்து அனுமதிப்பத்திரத்தை வழங்கியுள்ளது. எஞ்சிய 53 பேரும் தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரிக்கப் பட்டுவருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட 124 பேரும் கடந்த ஒரு மாதகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர். (ஐ-8)


HARVEST

ஹாவஸ்ட்

புதுச்சுவை குன்றாத தேநீர்

மலையகத்தின் பசுமையான தோட்டங்களிலிருந்து வரும் ஹாவஸ்ட் தேயிலை.....




நறுமணமும் புத்துணர்வும் தந்திடும் தேநீரை நீங்கள் பருக கலவை நுட்பமாகச் செய்யப்பட்டுள்ளது.

100 கிறாம் பக்கெட்டுகளில் கிடைக்கும்

Marketed by
BURNS
PHILP LANKA (PVT) LTD.
124, Templers Road, Mt.Lavinia.

JEYARASA & COMPANY
104.A, Stanley Road, Jaffna.

(சி14312)



Simas

MARGARINE

சீமாஸ் மாஜரின்

வாங்கிப் பாருங்கள்
மிகவும் வசதியானது
விலை சகாயமானது
பாவித்தல் சுலபமானது




- கேக் தயாரிக்க
- பான் தயாரிக்க
- பனிஸ் தயாரிக்க
- பிஸ்கட் (குக்கீஸ்) தயாரிக்க
- சமையலுக்கு
- தாளிப்பதற்கு
- பாணில் தடவி உண்பதற்கு

கொலஸ்ட்ரோல் அற்றது
ஹலால் செய்யப்பட்டது

☆ பக்கெட்டைத் திறந்த சில நாள்களின் பின் குளிரூட்டியில் வைப்பது நல்லது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரொக்கிஸ்ட்
ரூபா பன்முக வர்த்தகம்
104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேர்ண்ஸ் பிலிப் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்,
124, டெம்பிளர்ஸ் வீதி, கல்கிசை,
தொலைபேசி:731658-1 பக்ஸ்:731662, 717969

சீமாஸ் மாஜரின்
வசதியானது... சுவையானது... சத்துள்ளது

Minds FCB

(சி14313)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



அண்மையில் வெளியாகிய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற குருநகரைச் சேர்ந்த

செல்வன் மரியதாஸ் யூட்

(வர்த்தகம் 3 ஏ) எங்கள் ஊருக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். யூட் அவர்களையும் அவரது பெற்றோரையும் வழிகாட்டிய ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டுவோர்:-
குருநகர் சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகம்
ஆதரவு
சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்)

(சி14343)

# யாழ்.மாவட்டத்துக்குள் இடமாற்றம் பெறும் ஆசிரியர் பட்டியல் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் அடுத்த ஆண்டு இடமாற்றம் பெற்றுச் செல்ல விரும்பும் ஆசிரியர்களினதும், இடமாற்றப்பட்டுள்ள ஆசிரியர்களினதும் பெயர் விவரங்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையால் தயாரிக்கப்பட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் கூடிய வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றச் சபையினர் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்திருந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தனர்.

கல்விப் பணிப்பாளர்களது விடுவித்தல் கடிதத்துக்கு அமைய 50 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி -

தீவக வலயத்திலிருந்து பதினேழு ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றம் பெற விண்ணப்பித்துள்ளனர். தீவகத்துக்கு இடம்மாறிச் செல்ல எவரும் விண்ணப்பிக்கவில்லை. யாழ்.வலயத்திலிருந்து எட்டு ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றம் பெற விண்ணப்பித்துள்ளனர். 37 ஆசிரியர்கள் யாழ்.வலயத்துக்கு இடம்மாற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

வலிகாம வலயத்திலிருந்து 9 ஆசிரியர்களும் வடமராட்சி வலயத்திலிருந்து 7 ஆசிரியர்களும் தென்மராட்சியிலிருந்து 9 ஆசிரியர்களும் இடம்மாறிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் -

வலிகாமக் கல்வி வலயத்துக்கு 3 ஆசிரியர்களும் வடமராட்சி வலயத்துக்கு 8 ஆசிரியர்களும் தென்மராட்சி வலயத்துக்கு 2 ஆசிரியர்களும் இடம்மாற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இடமாற்றம் பெற்றவர்களுக்கான கடிதங்கள் ஆசிரியர்களின் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

ஜனவரி மாதம் முதல் இவர்கள் புதிய பாடசாலைகளில் பணியாற்றுவர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

யாழ்.வலயத்திலிருந்து 30 ஆசிரியர்களாவது தீவகத்துக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இடமாற்றச் சபையினர் கோரியுள்ளனர்.

யாழ்.வலயப் பாடசாலை ஒன்றில் 6 வருடத்துக்கு மேற்பட்ட காலம் தொடர்ந்து பணியாற்றுபவர்களை தீவகத்துக்கு இடமாற்றம் செய்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு இடமாற்றம் செய்யப்படுபவர்களின் பெயர் விவரங்களை யாழ். மேலதிகக் கல்விப் பணிமனைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6)

## வீதி குறியீடுகள் அமைப்பு

வடமராட்சிப் பகுதியில் பிரதான வீதிகளில் உள்ள சந்திகளில் வீதிக் குறியீடுகள், வீதியைக் கடப்பதற்கான மஞ்சள் வர்ணக் குறியீடுகள் என்பன ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்திருப்பது மற்றும் போக்குவரத்து நெருக்கடி போன்றவை காரணமாகவே வீதிக் குறியீடுகள் அமைக்கும் பணியினை வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (ஐ-118)

# கசிப்பு வழக்கில் 3 பெண்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

நெல்லியடி,டிசெ.20

கசிப்பு வழக்கு தொடர்பாக, பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பிரசன்னமாகத் தவறிய மூன்று பெண்களுக்கு, எதிராக நீதிமன்றினால் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடவத்தை துன்னாலை கிழக்கைச் சேர்ந்த வல்லி புஷ்பராணி, உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி கலாநிதி, தொண்டமனாறு கெருடாவிலைச் சேர்ந்த யோகராசா செல்வேந்திரராணி, ஆகியோர், சட்டவிரோதமான வகையில் தமது வீட்டில் கசிப்பு வைத்திருந்ததாக, பருத்தித்துறை பிரதான மதுவரிப் பரிசோதகரினால், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை கடந்த 14ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் பொ.குமாரசாமி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம், குறித்த மூன்று பெண்களும் மன்றில் ச்மூகமளிக்கவில்லை. இதனையடுத்தே, குறித்த மூவரையும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி அழைப்பாணை மூலம் நீதிமன்றில் முற்படுத்துமாறு, பதில் நீதிவான், பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-109)

## பணியாளர் கௌரவிப்பு

அரியாலை,டிசெ.20

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ந்து 25 வருடங்கள் சேவையாற்றிய இரண்டு பணியாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் பொதுச் சபைக் கூட்ட முடிவில் பொதுச்சபை உறுப்பினர்கள் மத்தியில் இந்தப் பாராட்டு விழா இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் சீ.வி.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கத்தின் எழுதுவினைஞர் எஸ்.பாலச்சந்திரன், கிளைமுகாமையாளர் ந.இராசரத்தினம் ஆகிய இரு பணியாளர்களுக்கும் சங்க இயக்குநர் சபா.தியாகராஜா மலர் மாலை அணிவித்தார். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் இவர்களுக்கான சேவைச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார். (ஐ-17)

# மீளாய்வு செய்த பின்னரே ஜனவரி மாத நிவாரணம்

வலி.வடக்கு,டிசெ.20

எதிர்வரும் ஜனவரி மாத நிவாரணம் மீளாய்வைத் தொடர்ந்தே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு வசதியாக இந்த மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் நிவாரண மீளாய்வை மேற்கொள்ளும்படி கிராம அலுவலர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

எனினும் இவ்வளவு குறுகிய கால இடைவெளியில் இந்த வேலையைப் பூரணமாகச் செய்து முடிக்க இயலாதென கிராம அலுவலர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீளாய்வுப் பணியில் ஈடுபடவுள்ள குழுவில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் இடம்பெறுகின்றமையால் குறுகிய காலத்தில் உரிய விண்ணப்பங்களைப் பார்வையிட்டு முடிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னும் மீளாய்வுக்குரிய படிவங்கள் வழங்கும் நடவடிக்கைகள் கூட ஆரம்பிக்கப்படவில்லை.(ஐ-86)

## சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

வடமராட்சி கிழக்கில் 25 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கையளிக்கும் வைபவம் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பருத்தித்துறை பிரதேச சபையின் உபதலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் நியமனக்கடிதங்களைக் கையளித்தார்.

மருதங்கேணி பிரதேச செயலர் எஸ்.வேலாயுதபிள்ளையும் இதில் பங்குகொண்டார். (ஐ-3)

# மாநகர சபைப் பகுதியில் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். நகரிலுள்ள வடிகால்களைத் துப்பரவு செய்யும் நடவடிக்கைகள் யாழ்.மாநகர சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

கட்டம் கட்டமாக இந்தத் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

முதற்கட்டமாக கஸ்தூரியார் வீதியின் இருபக்கங்களிலும் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படவுள்ளன. இந்த நடவடிக்கையின் போது வடிகால்களை மூடி வர்த்தக நிறுவனங்களினால் கட்டப்பட்டுள்ள படிகள் சபை ஊழியர்களால் அகற்றப்படும் என்றும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)

## இரு இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு மாவட்டம் ஆறுமுகத்தான் குடியிருப்புப் பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் நேற்று முன்தினம் இரண்டு இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த பொன்னன் சுரேஷ்குமார் (வயது22), குமார்பேரின்பம் (வயது 21) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்தது தெரிந்ததே. (ஐ-7-21)


உ

கோண்டாவில் மேற்கு

**ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில்**

(காளி கோயில்)

ஆலய பரிபாலன சபை

**மகா சபைக் கூட்டமும் பரிபாலன சபைத் தெரிவும்**

மகா கணபதிப் பிள்ளையார் (காளி கோயில்)

பற்று மக்களுக்கு,

அடியார்களே,

2001 ஆம் ஆண்டு தை மாதம் ஆறாம் திகதி (06-01-2001) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் கூட்டம் நடைபெறும். பிள்ளையார் கோயில் (காளி கோயில்) பற்று வாழ் மக்கள் அனைவரையும் கூட்டத்தில் பங்கு கொண்டு புதிய சபையைத் தெரிவு செய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

**ஆலய பரிபாலன சபை**

இ.நடராசா, தலைவர்.

ஸ்ரீ கணபதிப் பிள்ளையார் கோயில் கோண்டாவில் மேற்கு.

க.மகாதேவா, செயலாளர்.

(81839)


# மீட்கப்பட்ட சைக்கிள்கள் யாழ். நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் திருடப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட நிலையில் பொலீஸாரால் மீட்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகளில் இதுவரை உரிமையாளர்களால் உரிமை கோரப்படாது இருந்த 12 சைக்கிள்கள் யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஒப்படைத்தார்.

ஒப்படைக்கப்பட்டுள்ள சைக்கிள்களின் இலக்கங்கள் வருமாறு:-

55740199, 55661592, ஈ.சற்.571, 11171264, ஏ.டி.61797, 55778545, 0637082, 5566403/, ஏ.எச்.83919, 5573282, 55906323, 01ஈ.ஆர்.7260 இந்த சைக்கிள்கள் தற்போது யாழ்.நீதிமன்றில் அடையாளம் காண்பதற்காக பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

உரிமையாளர்கள் உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நீதிமன்றில் வந்து சைக்கிள்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் -

அவ்வாறு உரிமை கோரப்படாத சைக்கிள்கள் ஆறு மாதங்களின் பின்னர் நீதிமன்றில் வைத்து பகிரங்க ஏலத்தல் விற்கப்படும் எனவும்-

யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு தெரிவித்தார். (ம-6-10)

# உதவி வழங்கும் நாடுகளின் நிபந்தனை குறித்து நாடாளுமன்றில் விவாதம் வேண்டும்

## ஐக்கிய தேசியக்கட்சி கோரும்

கொழும்பு,டிசெ.20

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசுக்கு விதிக்கும் நிபந்தனைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள வசதியாக நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்த வேண்டும் என்று ஐ.தே.கட்சி கோரவிருக்கின்றது.

பாரிஸில் நேற்று முன்தினம் ஆரம்பமான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் முடிவில் இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு அந்த நாடுகள் பல நிபந்தனைகளை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அந்த நிபந்தனைகளை பொதுமக்களும் அறிய வகை செய்யும் விதத்தில் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று-

ஐ.தே.கட்சி கோரவுள்ளது. (ம-3)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் உள்ளக தொலைபேசி வசதி

பருத்தித்துறை,டிசெ.20

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஐந்து லட்சம் ரூபா செலவில் உள்ளகத் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

ஐம்பது உள்ளக இணைப்புக்கள் கொண்டதும் இரண்டு நேரடி வெளித் தொலைத்தொடர்பு இணைப்புக் கொண்டதுமான உள்ளகத் தொலைபேசி இணைப்பின் ஊடாக வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுகளுடனும் தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இந்த உள்ளகத் தொலைபேசி இன்மையால் வைத்தியசாலையின் ஏனைய பிரிவுகளுடன் தொடர்பு கொள்வதில் வைத்தியசாலை நிர்வாகம் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்தே விரைவில் உள்ளகத் தொலைபேசி வசதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-118)

## வருடாந்த இசை வழிபாடு

கொழும்புத்துறை,டிசெ.20

அல்வாய் மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த கிறிஸ்மஸ் இசை வழிபாடு இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அருட்செல்வி ஜெயக்குமாரி ரட்ணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-30)


**மலிவு விற்பனை**

**லைடன் புடைவை நிலையம்**

நத்தார் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு

01.12.2000 முதல் 31-12-2000 வரை

வாடிக்கையாளரின் நன்மை கருதி விசேட கழிவுடன் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

இன்றே முந்திக் கொள்ளுங்கள்!

கவுண், புடைவைகள், துணிகள், சேட்டிங், சூட்டிங் மற்றும் பல வகையான துணி வகைகள் வாங்கிக் கொள்ள முந்துங்கள்!!

**லைடன் புடைவை நிலையம்**

(பஸ் நிலையம் முன்பாக)

410, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(C/14092)


**துயர் பகிர்கின்றோம்**

எமது சக மாணவி செல்வி யா.யசோதினி அவர்களின் அன்புத் தந்தையார்

**யாதவராஜா**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் குடும்பத்துடன் இணைந்து துயர் பகிர்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் வருட இசைத்துறை மாணவர்கள்,
நுண்கலைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(81834)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### PERSONAL MATHS CLASS

தனிப்பட்ட முறையில தரம்10,11 இற்கான கணிதம் கற்பிக்கப்படும். குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டும். ஆசிரியர்: யூட், 54/2, சந்தான மாதா கோயில் முன்ஒழுங்கை, கொழும்புத் துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (81783)

### புறோயிலா விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FARM** புறோயிலா இறைச்சிக்கோழி, **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். **(T.P.2868)** (81780)

கொழும்பில் இருந்து சுத்தம் செய்யப்பட்ட பிறிமா புறோயிலர் கோழி இறைச்சி தினமும் விற்ப னைக்கு உண்டு. தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, (கஸ்தூரியார் வீதிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்; சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப் பாணம். (81720)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ சைவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயது, அச்சுவினி 1ஆம் பாதம், செவ்வாய் இல்லாத ஆனால மொத்தம் 62 புள்ளி பாவமுள்ள, 5அடிவரை உயர முள்ள ஆசிரியப் பெண்ணுக்கு சைவ குடும்பத்தைச் சேர்ந்த, ஒழுக்க சீல ரான, அரச சேவை, உள்ளூர் மணமகன் தேவை. விரிவுரையாளர், ஆசிரியர் விரும்பத்தக்கது. விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1162, மே/பா உதயன். (81779)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முரு கேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). முத்திரைச் சந்தை யடி நல்லூர். (81837)

சேவல், கல்பேட்ஸ் தினமும் இலவசமாகச் சுத்தம் செய்து பெற் றுக் கொள்ளலாம். லவ்பேட்ஸ் (பச்சை, நீலம்) விற்பனைக்குண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடு வில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (81827)

### தவறிவிட்டன

யாழ்ப்பாணம், அரியாலை முள்ளிவீதியைச் சேர்ந்த யோகராசா யோகசீலன் என்பவருடைய (இல. 830100300V) தே.அ.அட்டையும், (090201125V) வி.அ.அட்டையும் கச் சேரிக்கும் நந்தாவில் அம்மன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் செ.லட்சுமி காந்தன், குட்செட் வீதி, கோண்டாவி லில் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (81820)

விமலதாசு கசிதா என்பவருடைய தே.அ.அ(இல.091501492)கொடிகா மத்துக்கும் கறுக்காய்க்கும் இடை யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் குமார்ஸ்ரோர்ஸ்,வரணி வடக்கு, வரணி எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (81833)

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த இராசசிங்கம குகனேஸ்வரி என்பவரின் கைச்சங்கிலி(1 1/4 பவுண்) கொக்குவில் மணியார்பதி வீதிக்கும் தாவடிச் சந்திக்கும் இடை யில் 07.12.2000 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அம்பிகா மருந்தகம், இணு வில் எனும் முகவரியில் ஒப்ப டைத்துதவவும். சன்மானம் வழங் கப்படும். (81846)

### திருமண சேவை

எங்களிடம் உள்ளூர், வெளியூர் கிறிஸ்தவமதம், உத்தியோகத்தில் மணமக்கள் உண்டு புகைப்படம், ஜாதகங்களுடன் தொடர்பு கொள்ள வும். துர்க்கா திருமண சேவை 173, நாவலர் றோட், பிறவுண்றோட்சந்தி, யாழ்ப்பாணம். (81842)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமைய கட்டிக் கொடுக்கப்படும் (இருபிரதி கள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-)தொடர்பு: பாரதி, 430, காங்கே சன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல:3081. **(C/14241)**

## ஏமாற்றுப் பேர்வழிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்

அன்பார்ந்த பொதுமக்களே!

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய திருப்பணி நிதி என்ற பெயரில் ஏமாற்றுப் பேர்வழிகளால் போலியான ரிக்கற்றுக்கள் அச் சிட்டு பாடசாலைகள் ஊடாகவும் பொது இடங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டு, எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறான திருப்பணி நிதி வசூலுக்கும் எமது ஆலயத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை தெளிவுபடுத்துகின்றோம். அன்பர்கள் யாராவது விரும்பிக் கொடுத்தாலொழிய எக் காலத்திலும் மேற்படி ஆலய அறங்காவலர் சபை பொதுமக்களிடம் ஆலயத் திருப் பணிக்காக நிதி வசூல் செய்வதில்லை. மேற்படி இவ்வாலயத்தின் சார்பில் நிதி வசூல் செய்யவோ, பொருள்கள் சேகரிக்கவோ அறங் காவலர் சபை எவருக்கும் அனுமதி வழங்கவுமில்லை. எனவே இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகளிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு அன்பர்கள் அனைவரையும் மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்கின் றோம். இந்த ஆலயத்தின் பெயரால் பொதுமக்களிடம் போலி வேடம் போட்டு திருப்பணி நிதி வசூல் செய்வதில் சம்பந்தப்பட் டுள்ளவர்களை ஆலயத்தின் சார்பில் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தற்போது விற்பனைக்கு விடப்பட்டுள்ள ஏமாற்றுப் பேர்வழிகளின் போலிப் பற்றுச் சீட்டுகளின் போட்டோப் பிரதியைக் கீழே காண்கின் றீர்கள். உதாரணமாக இவை 50/-, 20/- ரூபாவில் வெளியிடப்பட்டுள் ளன. இவ்வாறான வேறு பற்றுச்சீட்டுக்களும் விற்பனைக்கு உலாவு வதாக எமது கவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான போலிப் பற்றுச்சீட்டுக்களில் ஏமாற்றமடைய வேண்டாம் என அன்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| உ<br>நயினை நாகபூசணி அம்மன்<br>திருப்பணி நிதி<br>ரூபா 50-00<br>3770<br>சின்னகுளத்தடி கந்தரோடை சுன்னாகம்<br>தாயார் புனித நாகேஸ்வரி | உ<br>நயினை நாகபூசணி அம்மன்<br>திருப்பணி நிதி<br>ரூபா 20-00<br>532<br>சின்னகுளத்தடி கந்தரோடை சுன்னாகம்<br>தாயார் புனித நாகேஸ்வரி |

அறங்காவலர் சபை,
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.
(C/14356)


SALE! SALE! SALE!

நத்தார் புதுவருட மலிவு விற்பனை

* பீங்கான் கோப்பைகள்
* கப் & சோசர்
* றைஸ் பிளேற்ஸ்
* கறி டிஸ் என்பன

வியாபாரிகள் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

நியூ விராஜ்

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (81860)


## கண்ணீர் அஞ்சலி

ஊரெழு வாசியும், ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய ஆயுட்கால போஷகரும், பிரபல சமூக சைவத் தொண்டருமான



### அமரர் தம்பிமுத்து தம்பிராசா

அவர்கள் 18.12.2000 அன்று ஊரெழு வீரகத்தி விநாயகர் பாதக்கமலத்தில் இரண்டறக் கலந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய
நிர்வாக சபை.
ஊரெழு. (81858)

## 100 வறிய குடும்பங்களுக்கு இலவச பால்மா

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட முள்ளி, நவாலி வடக்கு, சாந்தை, சாவற்கட்டு பகுதி களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குழந்தைகள் உள்ள 100 வறிய குடும்பங்களுக்கு இலவச பால்மா வழங்கப்பட உள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைத்துப் பால்மா வழங்கப்படவுள்ளது என்று பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன் ரன் யோன்சன் தெரிவித்தார்.(ம-185)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY
20-12-2000



## செல்வி மு.லக்ஷனா

முருகநாகராஜா ~ கஜேந்தி
தம்பதிகளின் மகள் செல்வி லக்ஷனா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது பேரன் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.


இவரைப் பேரனாகிய மாணிக்கம், கனகரத்தினம், அம்மம்மா, அப்பம்மா, மாமாமார், பெரியப்பாமார், சித்தப்பா மார், அத்தைமார் ஒன்று சேர்ந்து எங்கள் குல தெய்வமா கிய மாரியாச்சியின் அருளால் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

82/11, 3 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
(அரியகுளம்)
யாழ்ப்பாணம்.

மா. கனகரத்தினம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
யாழ்.மாவட்ட சமாதான நீதிபதி
(81854)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 31 - 12 - 1950



ஆண்டவன் அடியில் 22 - 09 - 2000

### அமரர் திருநாவுக்கரசு பொன்னம்பலம்

(முன்னாள் பொறியியல் உதவியாளர், இ.போ.ச.)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"

எங்கள் குடும்பக் குலவிளக்கு மறைந்த செய்தி கேட்டு நேரிலும், பத்திரிகை மூலமும், கடிதமூலமும் அனுதாபத்தி னைப் பகிர்ந்தவர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவி கள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"சத்திய சாயி இல்லம்"
செட்டியார் மடம்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

மனைவி, மகள்.
(81845)

யாழ்ப்பாணம்

## எதிர்வரும் பதினைந்து ஆண்டுகளில்

# தீவிரவாதிகள் நவீன ஆயுதங்களை பயன்படுத்துவது மிக அதிகரிக்கும்

### ஆய்வறிக்கையில் தகவல்

வாஷிங்ரன், டிசெ. 20

அடுத்துவரும் 15 ஆண்டுகளில் தீவிரவாதிகள் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவது அதிகரிக்கும் என்று அமெரிக்கப் புலனாய்வுத் துறை வெளியிட்ட ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும், கூறப்பட்டுள்ளதாவது.

எதிர்வரும் காலங்களில் ஏவுகணைத் தாக்குதல்கள் உலகைப் பலமாக அச்சுறுத்தும்.

தற்போதுள்ளவற்றை விட 2015 ஆம் ஆண்டளவில், தீவிரவாதிகளின் தந்திரோபாயங்கள் நவீனமயமாகும். அத்துடன் அவர்கள் பாரிய சேதங்களை ஏற்படுத்தும் தாக்குதல்களை அப்போது அவர்கள் மிக இலகுவாக மேற்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருப்பார்கள்.

சர்வதேச ரீதியான வன்செயல்களுக்கும், தீவிரவாத நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிக்கும் நாடுகளின் அச்சுறுத்தல்கள் அடுத்துவரும் காலகட்டத்தில்மழுங்கிவிடும்.

அதற்குப் பதிலாக சுயாதீனமாக இயங்கும் தீவிரவாதக் குழுக்களின் செயற்பாடுகள் பெருமளவு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும்.

தீவிரவாதிகள், இரசாயன, உயிரியல், அணுக்கதிர் வீச்சு உபகரணங்கள் மூலம் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வலு, எதிர்வரும் 15 ஆண்டுகளில் மிக அதிகளவில் பலமடையும்.

அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர், 2015 ஆம் ஆண்டில் உலகப் போக்குகள் குறித்து வெளியிட்ட ஆய்வு அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## அதிகாரபூர்வமான அறிவிப்பு:

# 43ஆவது அமெரிக்க அதிபராக புஷ்

வாஷிங்ரன், டிசெ. 20

அமெரிக்காவின் 43 ஆவது அதிபராக ஜோர்ஜ்- டபிள்யு. புஷ் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

இதனை அறிவித்த அமெரிக்கத் தேர்தல் மன்றம் மொத்தம் உள்ள 538 தேர்தல் வாக்காளர் மன்ற வாக்குகளில், 271 வாக்குகளை புஷ் பெற்றுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

அதிபராகத் தேவையான 270 வாக்குகளை விட புஷ் 1 வாக்கு அதிகமாகப் பெற்றுள்ளார்.

கடும் இழுபறி நிலையில் இருந்த அதிபர் தேர்தல் முடிவில், புளோரிடாவில் புஷ்பெற்ற 25 வாக்காளர் மன்ற வாக்குகள் அவரின் வெற்றிக்கு வழிவகுத்தன.

அதிகார பூர்வமான அறிவித்தலின் பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் புஷ் அமெரிக்க நிர்வாகத்துறைகளின் உயர்மட்டக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

இக் கூட்டத்தின் முடிவில் தனது உத்தியோக பூர்வ கொள்கை உரையை புஷ் நிகழ்த்துவார் என்று கூறப்படுகிறது. (ஓ-8)

# வீரப்பன் காட்டிலிருந்து தப்பி இலங்கைக்குச் செல்லவில்லை

### கர்நாடக முதல்வர் நம்பிக்கை

சென்னை, டிசெ. 20

சந்தன மரக் கடத்தற்காரன் வீரப்பன் இலங்கைக்குத் தப்பிச் செல்லவில்லை என்று கர்நாடக மாநிலமுதல்வர் எஸ். எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சென்னையில் தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய போதே இதனை கிருஷ்ணா கூறினார்.

வீரப்பன் சத்தியமங்கலம் காட்டுப் பகுதிக்குள்தற்போது தங்கியிருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று எஸ். எம். கிருஷ்ணா, கூறினார்.

தமிழக, கர்நாடக அரசுகளுடன், மத்திய அரசும் இணைந்து வீரப்பனைப் பிடிக்கத் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் —

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அதிரடிப்படையின் தேடுதலில் வீரப்பனைப் பிடித்து விடலாம் என்று தாம் உறுதி ஆக நம்புவதாவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-8)

# பிற இனத் தீவிரவாதிகளாலேயே காஷ்மீர் நிலைமை மோசமானது!

### அமானுல்லா கான் கருத்து

ராவல்பிண்டி., டிசெ. 20

காஷ்மீர் பள்ளத்தாக்குச் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் காஷ்மீரிகள் அல்லாத தீவிரவாதக் குழுக்கள் தலையிட்டுள்ளதாலேயே நிலைமை மோசமடைந்துள்ளது.

இவ்வாறு ஜம்மு -காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் அமானுல்லாகான் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இருந்து செயற்பட்டுவரும் அமானுல்லாகான் ராவல் பிண்டியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இதனைக் கூறினார்.

காஷ்மீரிகள் அல்லாதவர்களை கொண்டுள்ள தீவிரவாதக் குழுக்களான, லஸ்கர்—இ- தொய்யா, ஹர்கக் — உல் — முஜாஹிதீன், ஜெய் — ஹி-முகமட் போன்ற குழுக்கள் சம்பந்தப்பட்ட பின்னர் தான் காஷ்மீர் மக்களின் உரிமைப் போராட்டம் பயங்கரவாதமாக மாறியுள்ளது என்றும் அமானுல்லா கான் தெரிவித்தார்.

இத்தகைய குழுக்களின் தலையீடுகள் காஷ்மீர் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று கூறிய அவர், ஈரான், ஆப்கானிஸ்தான் போன்று காஷ்மீர் மாறுவதை தனது அமைப்பு ஒரு போதும் விரும்பாது எனவும் தெரிவித்தார்.

காஷ்மீர்ப் பிரச்சினையில் காஷ்மீரியர்கள் இடம்பெற்ற குழுக்களே முதலில் போராட்டங்களை ஆரம்பித்தன.

நாளடைவில் பாகிஸ்தான் ஆதரவுபெற்ற காஷ்மீரியர்கள் இடம்பெறாத — தீவிரவாதக்குழுக்கள் தலையிட்ட பின்னரே வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் மற்றைய மாநிலங்களில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கு காஷ்மீரியர் அல்லாத குழுக்களே காரணம் எனக் கருதப்படுகிறது. (ஓ-8)

# ஆப்கானிலிருந்து ஊழியரை திருப்பி அழைக்க ஐ. நா. தீர்மானம்

நியூயோர்க், டிசெ. 20

ஆப்கானிஸ்தானில் உள்ள தனது ஊழியர்களை திருப்பி அழைத்துக்கொள்ள ஐ. நா. முடிவு செய்துள்ளது.

இந்த வார இறுதியில் ஆப்கானிஸ்தான் மீது கூடுதலான பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐ. நா. ஏற்கெனவே தீர்மானித்திருந்தது.

ஆளும் தலிபான் அரசின் தீவிரவாத ஆதரவுச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஐ நா. இந்தத் தடைகளை அமுலாக்க உள்ளது.

தடைகள் நடைமுறைப் படுத்தப்படும் சமயத்தில் ஆப்கானிஸ்தானில் உள்ள தனது ஊழியர்கள் தலிபான்களால் பழிவாங்கப்படலாம் என்று ஐ நா. அஞ்சுகிறது.

இதனாலேயே தனது ஊழியர்களைத் தற்காலிகமாகத் திருப்பி அழைக்க ஐ. நா. தீர்மானித்துள்ளது.

ஐ. நாவின் இந்த முடிவையடுத்து, மேற்கத்தைய நாடுகளின் உதவியமைப்புகளும் ஆப்கானிஸ்தானிலிருந்து தமது பணியாளர்களை தற்காலிகமாக திருப்பி அழைக்க முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஓ-8)

# ரிசேர்வ் வங்கி தலைவருடன் புஷ் சந்திப்பு

வாஷிங்ரன், டிசெ. 20

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோர்ஜ். டபிள்யு. புஷ், நாட்டின் நிதித்துறைக் கட்டுப்பாட்டு மையமாகச் செயற்படும் பெடரல் ரிசேர்வ் வங்கியின் தலைவர் அர்னால்ட். கிம்ஸ் பென்னைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் பொருளாதார, நிதித்துறை வளர்ச்சி பற்றி தெரிவு செய்யப்பட்ட அதிபர் கூடுதல் கவனம் செலுத்துவதாக வங்கி உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (ஓ)

# மரணதண்டனையை ஒழிப்பதில் உலக ரீதியில் வெற்றி பெறலாம்

### கோபி அனான் நம்பிக்கை

மரண தண்டனையை உலகளாவிய ரீதியில் தடை செய்யும் முயற்சியில் வெற்றியடைய முடியும் என்று ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் நம்பிக்கை தெரிவித்தார்.

ரேன் நகரை மையமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்தபோதே அனான் இந்த நம்பிக்கையைத் தெரிவித்தார்.

பல நாடுகளுக்கும் சென்று, மரண தண்டனைக்கு எதிரான கருத்துக்கு ஆதரவாக மதத்தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் மனித உரிமைகள் அமைப்பு திரட்டிய கையெழுத்துக்கள் அடங்கிய மனு — கோபிஅனானிடம் கையளிக்கப்பட்டது.

11 ஆண்டுகளின் முன்னர் ஐ நா. வின் மரணதண்டனை ஒழிப்புப் பிரேரணைக்கு 43 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன. 90 நாடுகள் பிரேரணையை ஏற்கவில்லை.

பிரேரணையை ஏற்காத நாடுகளில் ஒன்றான அமெரிக்காவில் 1976 ஆம் ஆண்டின் பின்னர் உலகில் மிக அதிகமான மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் ரயில் விபத்து:

ஜப்பானில் இரு ரெயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒருவர் உயிரிழந்தார்.

சிறியரக பாதாள ரயில் ஒன்றில் 'பிரேக்' செயற்படாததாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக ஜப்பானிய ரயில்வே அறிவித்துள்ளது.

## மக்களின் ஆதரவு பெற்ற

# நெதன்யாகு பிரதமர் தேர்தலில் போட்டியிட இஸ்ரேலில் தடை

டெல் அவிவ், டிசெ. 20

இஸ்ரேலியப் பிரதமர் தேர்தலில் பெஞ்சமின் நெதன்யாகு போட்டியிடவழி செய்யும் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

9 நாள்களுக்கு முன்னர் பிரதமர் பதவியில் இருந்து எகுட் பராக் விலகினார்.

இதனையடுத்துப் பிரதமர் பதவிக்கான தேர்தலை முன் கூட்டியே நடத்த வழி செய்யும் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பிரதமர் பதவித் தேர்தலில் பராக்குக்கு எதிராகப் போட்டியிட்டு வெல்லும் வாய்ப்பு உடையவர் என்று கருதப்படுபவர் பெஞ்சமின் நெதன்யாகு. ஆனால் அவர் தற்சமயம் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லை.

இஸ்ரேலியச் சட்டப்படி நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இல்லாதவர் பிரதமர் பதவிக்குப் போட்டியிட முடியாது.

ஆகவே, நெதன்யாகுவைப் பிரதமர் பதவித் தேர்தலில் போட்டியிட வழி செய்யும் விதியும் முன்னைய பிரேரணையில் சேர்க்கப்பட்டிருந்தது.

வாக்கெடுப்பில் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதால் நெதன்யாகு பிரதமர் பதவித் தேர்தலில் போட்டியிட இயலாமல் போய் விட்டது.

சமீபத்தில் இஸ்ரேலில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் நெதன்யாகுவுக்கு மக்களிடம் அமோக ஆதரவு இருப்பது தெரிய வந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-8)

# கண்ணிவெடியில் வாகனம் சிக்கி 25 பேர் பலி

காபூல், டிசெ. 20

ஆப்கானிஸ்தானில் நிலக்கண்ணிவெடிகளில் வாகனங்கள் சிக்கியதில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்கமிஷ் மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த ஜீப்பும், பேருந்தும் நிலக்கண்ணிவெடிகள் மேலேறிச் சென்றதால் வெடி விபத்தில் சிக்கின.

கடும் மணல் காற்றினால் பாதை மாறிய வாகனங்கள் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பகுதிக்குள் வழி தவறிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

# ஜெருசலேம் குண்டு வெடிப்பில் பலஸ்தீன மூத்த தலைவர் பலி!

காஸா, டிசெ. 19

மேற்குக் கரை நகரான ஜெருசலேமில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் முக்கிய பலஸ்தீனத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் 'பதாஹ்' இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவரே இறந்தவராவார்.

தமது அமைப்பின் மூத்த தலைவர் கொல்லப்பட்டதற்கு இஸ்ரேலிய இராணுவத் தாக்குதலே காரணம் என்று 'பதாஹ்' இயக்கப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதனை மறுத்த மேற்குக் கரை இஸ்ரேலிய இராணுவப் பொறுப்பாளர், பலஸ்தீன மூத்த தலைவர், அவர் வைத்திருந்த வெடிகுண்டு தவறுதலாக வெடித்ததில் இறந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேற்குக்கரையில் பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலிய இராணுவத்துக்கும் இடையே மோதல்கள் நடந்துவருகின்றன.

இந்த மோதல்களில் அரபாத்துக்கு மிக நெருக்கமான தலைவர்களை இஸ்ரேலியப் படைகள் திட்டமிட்டுக் கொன்று வருவதாக பலஸ்தீனத் தரப்பு குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போனோரின்சிறாருக்கு உதவி வழங்கும் வைபவம் இன்று

## பல்கலைக்கழக மாணவர் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம். டிசெ. 20

குடாநாட்டில் 1996 ஆம், 1997 ஆம் ஆண்டுகளில் காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களுக்கு உதவும் திட்ட ஆரம்ப வைபவம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசுவும், சிறப்பு விருந்தினர்களாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் என். கந்தையா மனித நேய அமைப்புகளின் செயலாளர் அ. கி. சிவசுப்பிரமணியம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தைச் சேர்ந்த சி. சோதிநாதன், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத் தலைவர் பி. செல்வராசா, சங்கச் செயலர் அ. சற்குணம், அன்னையர் முன்னணித் தலைவி செ.கமலாம்பிகை, நுண்கலைத் துறை விரிவுரையாளர் க. சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து சொள்வர்.

இந்த நிகழ்வில் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

காணாமற்போனவர் தொடர்பாக பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பித்த பாதுகாவலர்கள் பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் சமுகம் தந்து வங்கிப் பதிவேட்டைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-ம-3)

# புதுப்பொலிவு பெறும் காவலரண்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 20

2001 ஆம் ஆண்டு புது வருடத்தை முன்னிட்டு வடமராட்சிப் பகுதியிலுள்ள இராணுவ காவலரண்கள் புதுமெருகூட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை காவலரண்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி உட்பட, வடமராட்சியிலுள்ள பிரதான வீதிகளிலும், கரையோரப் பக்க வீதிகளிலும் புதிய காவலரண்கள் சங்கிலித் தொடர் போல அமைக்கப் பட்டு வருவதைக் காண முடிகிறது.

ஆரம்ப காலங்களில் அமைக்கப்பட்ட காவலரண்களைப் போலன்றி தூர இடங்களையும் அவதானிக்கக் கூடிய வகையில் மாடிகள் போன்று அமைக்கப்பட்டு வருகின்றன. (இ-15)

# பிரதம பரீட்சகர்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைப் பிரதம பரீட்சகர்கள் கொழும்புக்குச் செல்வதற்கான பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை வியாழக்கிழமை பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தமக்கு உரிய பயணச் சீட்டுக்களை வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை அலுவலகத்தில் இன்று கொள்வனவு செய்யும்படி யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார் (இ-3)

# பேச்சுக் குறித்த அடுத்த நடவடிக்கை தற்போது அரசாங்கத்தின் கையில்

## ஐ. தே. கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, டிசெ. 20

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ள இன்றைய நிலையில், பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை மேற்கொண்ட தற்போதைய அரசே இது குறித்த அடுத்தகட்ட நடவடிக்கையையும்மேற்கொள்ள வேண்டும் என ஐ.தே.க. அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயேஇந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை யுத்தம் மூலம் தீர்ப்பதா? பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதா? என்றபிரச்சினை தொடர்ந்து வந்தது. அதற்குப் பேச்சுக்கள் மூலமான தீர்வே காணப்பட வேண்டும் என அரசு அறிவித்திருந்தது. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நோர்வே அரசு தலையிட்டுச் சமாதானத் தீர்வு குறித்த ஆலோசனைகளை வழங்கியது.

விடுதலைப் புலிகளின் தலைவரைச்சந்திக்க நோர்வேஅரசு பிரதிநிதிகளை அரசு அனுப்பியது. விடுதலைப் புலிகளின் தலைவர் தமது அமைப்பின் நிலைப்பாட்டை மாவீரர் தின அறிக்கை மூலம் விளக்கியிருந்தார். பேச்சுவார்த்தைக்குப் படை வாபஸ் தேவையில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். இப்போது அரசின் முறை. அடுத்த கட்ட நடவடிக்கை அரசின் கையிலேயே உள்ளது.

இதனால் இவ்விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதிலிருந்து ஐ. தே. க. விலகியிருக்கத் தீர்மானித்துள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

# 8 இந்துக் கோயில்களுக்கும் கிறிஸ்தவ தேவாலயத்துக்கும் நிதி

யாழ்ப்பாணம், டிசெ. 20

சேதமடைந்த ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 8 இந்து ஆலயங்களுக்கும் கிறிஸ்தவதேவாலயம் ஒன்றுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு–கிழக்கு தமிழ் விவகார, இந்து சமய கலாசார அமைச்சார் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையின் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஈ. பி. டி. பி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியுதவி பெறும் இந்து ஆலயங்களின் விவரம் வருமாறு:-

மயிலணி முருகமூர்த்தி ஆலயம் (இரண்டு இலட்சம் ரூபா) மற்றும் மயிலணி அம்மன் ஆலயம், ஏழாலை ஞானவைரவர் ஆலயம், ஏழாலை பெரிய தம்பிரான் ஆலயம், சுன்னாகம் ஐயனார் ஆலயம், கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் ஆலயம், சங்குவேலி வெட்டுக்கட்டை சித்திவிநாயகர் ஆலயம், தாவடி ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயம் (தலா ஒரு லட்சம் ரூபா).

இதே வேளை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயப் புனரமைப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகளினால் சேதமடைந்த குடாநாட்டின் ஏனைய ஆலயங்களுக்கும் கட்டம் கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் தெரிவித்தார். (இ-7)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, டிசெ.20

தொல்புரம் கிழக்கு ஸ்ரீமடத்துப்பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் கதை ஆரம்பமாகி உள்ளது. தொடர்ந்து 21 தினங்கள் இது நடைபெறும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை பிள்ளையார்கதை பூர்த்தியடையும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, டிசெ. 20

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் நாளை வியாழக்கிழமை காலை ஏகாதசி உற்சவம் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் நத்தார் விழா இம் மாதம் 28 ஆம் திகதி மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'குடிலின் கானங்கள்' என்னும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (இ-10-15)

# பிரச்சினைகளைக் கேட்டறிகிறார் தமிழ்க் காங்கிரஸ் எம். பி.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி யாழ்ப்பாணத்திலுள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ்ப்பாண மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து வருகிறார்.

நேற்று முன்தினம் யாழ். அரச செயலகத்துக்கு விஜயம் செய்த அவர் அரச அதிபர் க.சண்முகநாதனைச்சந்தித்து யாழ். மாவட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இன்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு விஜயம் செய்யும் அவர் இணைய பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளார்.

# 'யுனிசெவ்' உதவியுடன் மலசலகூடம் அமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் 39 மலசலகூடங்களை அமைக்க உதவியுள்ளது.

கொக்குவில் பகுதியில் 28 மலசலகூடங்களும் கோண்டாவில் பகுதியில் 11 மலசலகூடங்களுமாக மொத்தம் 38 மலசலகூடங்களை அமைப்பதற்குத் தேவையான பொருள்களை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கியது.

இவற்றை அமைப்பதற்குரிய கூலிக் கொடுப்பனவுகளாக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 3 ஆயிரம் ரூபா வீதம் நல்லூர் பிரதேச செயலகம் வழங்கியதாக நல்லூர் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6-180)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் 'எக்ஸ்-ரே' பொருத்தப்படவில்லை

வலி. வடக்கு, டிசெ. 20

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு 'எக்ஸ்–ரே' கருவி வழங்கப்பட்டுப் பல மாதங்களாகியும் அதனைப் பொருத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை போதிய இடவசதியின்றி மிகவும் நெருக்கடியான இடத்திலேயே இயங்கி வருகின்றது. 'எக்ஸ்ரே' கருவி பொருத்துவதற்கும் அங்கு இடவசதி இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதுவரை இவ் வைத்தியசாலைக்கு 'எக்ஸ்ரே' கருவி இயக்குநர் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

இந்த ஆஸ்பத்திரி இயங்கும் கட்டடத் தொகுதியில் ஒரு பகுதி இன்னமும் திருத்தப்படாமல் இருப்பதாகவும் அதனைத் திருத்திப் பயன்படுத்துவதன் மூலம் இடநெருக்கடியைக் குறைத்துக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-86)

# யாழ். சிறையில் உள்ள சிறுமிக்கு ஆயர் ஊடாகப் பெற்றோர் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 வயதுச் சிறுமிக்கு கிளிநொச்சியில் உள்ள அவரது பெற்றோர் யாழ். ஆயர் ஊடாகக் கடிதமும் பணமும் அனுப்பியுள்ளனர்.

அண்மையில் கிளிநொச்சிக்குச் சென்ற யாழ். ஆயர். அதிவந். தோமஸ் சவுந்தரநாயகத்தைச் சந்தித்த சிறுமியின் பெற்றோர் ஆயர் ஊடாகக் கடிதமும் பணமும் அனுப்பி வைத்துள்ளனர்.

கோணாவில் வீதி அக்கராயனைச் சேர்ந்த இராமசாமி ரேணுகா என்ற சிறுமியே சிறையில் உள்ளவர் ஆவார்.

இந்தச் சிறுமி யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி மூலமாகப் பெற்றோருக்குக் கடிதம் அனுப்பியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-6-10)

# தொடர்பு கொள்ளக் கோரிக்கை

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் புதிதாக ஆள் சேர்ப்பு நடத்தப்பட்டபோது நியமனம் உறுதிசெய்யப்பட்டு, பாதுகாப்பு அனுமதி பெறாது நியமனக் கடிதம் பெற்றுக்கொள்ளாதவர்களை உடனடியாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுக்கான விசேட பொதுக் கூட்டமும் நூல் வெளியீடும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு வணிக கற்கைகள் மண்டபம் 2இல் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாணவர்களின்சஞ்சிகையான ''தொடர்புகள் இதழ்-8'' வெளியிடப்படவுள்ளதால் சகல மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார். (இ-6)

# லொறியில் பற்றுறிகள்

மன்னார் மாவட்டத்தில் முருங்கனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 30 மணியளவில் லொறி ஒன்றைச் சோதனை செய்த படையினர் 934 பற்றுறிகளைக் கைப்பற்றியுள்ளனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

பிரஸ்தாப லொறி முருங்கன் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும், உதவியாளரும் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை

டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடைசெய்யும் முகமாக, நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் நவாலிப் பகுதியில் வீதியோரங்களிலும் மற்றும் புல் நிறைந்து காணப்பட்ட பகுதிகளிலும் உள்ள புல், பூண்டு செடிகளை அழிக்கும் பணி சிரமதான முறையில் நடத்தப்பட்டது.

# பாதுகாப்பு அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

வெளியிடங்களுக்கு செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி பெற்றோர் விவரம் 17ஆம் திகதி வரை பிரதேச செயலர் ரீதியாக வருமாறு :-

**சங்கானை**

(170091ஏ), (170091பி), (170091சி), (170091டி), (172934ஏ), (173079ஏ), (174716ஏ), (174749ஏ), (174749பி), (174766ஏ), (174812ஏ), (174988ஏ), (175076ஏ), (175123ஏ), (175127ஏ), (175145ஏ), (175160ஏ), (175160பி),

**சாவகச்சேரி**

(162532ஏ)

**யாழ்ப்பாணம்**

(132031ஏ), (132031பி), (159405ஏ), (159412ஏ), (161080ஏ), (161080பி), (161080சி), (161080டி), (166101ஏ), (166101பி), (166101சி), (166208ஏ), (166213ஏ), (168709பி), (168852ஏ), (171656ஏ), (171656பி), (171656சி), (171656டி), (171698ஏ), (171699ஏ), (171820ஏ), (171889ஏ), (171889பி), (171892ஏ), (171897ஏ), (171898ஏ), (171898பி), (171903ஏ), (171904ஏ), (171905ஏ), (171959ஏ), (171959பி), (171960ஏ), (171960பி), (171960சி), (171984ஏ), (171990ஏ), (171990பி), (171990சி), (171990டி), (172005ஏ), (172024ஏ), (172024பி), (172054ஏ), (172072ஏ), (172095ஏ), (172132ஏ), (173429ஏ), (173444ஏ), (173444பி), (173444சி), (173445ஏ), (173445பி), (173445சி), (173480ஏ), (173482ஏ), (173493பி), (173510ஏ), (173547ஏ), (173565ஏ), (173567ஏ), (173570ஏ), (173572)ஏ, (173573ஏ), (173574ஏ), (173582ஏ), (173583ஏ), (173583பி), (173597ஏ), (173598ஏ), (173621ஏ), (173626ஏ), (173628ஏ), (173634ஏ), (173635ஏ), (173636ஏ), (173637ஏ), (173677ஏ), (173678ஏ), (173678பி), (173679ஏ), (173685ஏ), (173691ஏ), (173693ஏ), (173715ஏ), (173748ஏ), (173748பி), (173810ஏ), (173810பி), (173837ஏ), (173865ஏ), (173870ஏ), (173902ஏ), (173911ஏ), (175345ஏ), (175376ஏ), (175396ஏ), (175396பி), (175396சி), (175447ஏ).

**கரவெட்டி**

(132872ஏ), (153701ஏ), (153701பி), (153701சி), (155000ஏ), (155673ஏ), (158168ஏ), (158172ஏ), (160110ஏ), (162199ஏ), (162199பி), (164585ஏ), (164786ஏ), (164786பி), (164789ஏ), (164789பி), (165050ஏ), (165050பி), (165050சி), (165050டி), (165183ஏ), (165183பி), (165359ஏ), (167255ஏ), (167255பி), (167939ஏ), (167944ஏ), (167996ஏ), (169585ஏ), (169828ஏ), (169863ஏ), (169863பி), (169919ஏ), (169919பி), (169919சி), (169919டி), (169924ஏ), (169924பி), (169924சி), (172253ஏ), (172253பி), (172253சி), (172455ஏ), (172455பி) (172461ஏ), (174244ஏ), (174244பி), (174244சி), (174262ஏ), (174300ஏ), (174300பி) (174305ஏ), (174309ஏ), (174309பி), (174317ஏ), (174325ஏ), (174334ஏ), (174418ஏ), (174418பி).

**கோப்பாய்**

(168364ஏ), (168374ஏ), (173928ஏ), (173928பி), (173928சி), (173940ஏ), (174078ஏ), (174078பி), (174203ஏ), (166278ஏ), (168914ஏ), (168914பி), (168914சி), (149137ஏ), (168243ஏ), (168243பி), (168436ஏ), (172639ஏ), (172640ஏ), (172641ஏ), (172643ஏ), (172644ஏ), (172645ஏ), (172646ஏ), (172647ஏ), (172648ஏ), (172648பி), (172648சி), (172649ஏ), (172649பி), (172650ஏ), (172652ஏ), (172653ஏ), (172654ஏ), (172655ஏ), (172656ஏ), (172657ஏ), (172658ஏ), (172659ஏ), (172660ஏ), (172660பி), (172660சி), (172661ஏ), (172661பி), (172661சி), (172661டி), (172662ஏ), (172663ஏ), (172664ஏ), (172665ஏ), (172666ஏ), (172667ஏ), (172667பி), (172669ஏ), (172670ஏ), (172671ஏ), (172672ஏ), (172673ஏ), (172674ஏ), (172675ஏ), (172676ஏ), (172677ஏ), (172678ஏ), (172679ஏ), (172680ஏ), (172681ஏ), (172682ஏ), (172683ஏ), (172684ஏ), (172685ஏ), (172687ஏ), (172687பி), (172687சி), (172687டி), (172688ஏ), (172689ஏ), (172690ஏ), (172690பி), (172691ஏ), (172692ஏ), (172693ஏ), (172694ஏ), (172695ஏ), (172696ஏ), (172697ஏ), (172698ஏ), (173259ஏ), (173260ஏ), (173279ஏ), (173334ஏ), (173334பி), (173357ஏ).

**நல்லூர்**

(156895ஏ), (156895பி), (157170ஏ), (162869ஏ), (162870ஏ), (167500ஏ), (167500பி), (167500சி), (167500டி), (167706ஏ), (170657ஏ), (170658ஏ), (170666ஏ), (171506ஏ), (171637ஏ), (173940பி), (173940சி), (174062ஏ), (174062பி), (174106ஏ), (174106டி), (174106பி), (174106சி), (174109ஏ), (174109பி), (174132ஏ), (174132பி), (174132சி), (174140ஏ), (174153ஏ), (174154ஏ), (174155ஏ), (174157ஏ), (174160ஏ), (174165ஏ), (174174ஏ), (174175ஏ), (174189ஏ), (174189பி), (174191ஏ), (152433ஏ), (166060ஏ), (166060பி), (166411ஏ), (166411பி), (166411சி), (166411டி), (166411இ), (166426ஏ), (168709ஏ), (168857ஏ), (171661ஏ), (171816பி), (171816ஏ), (171661பி), (171819ஏ), (171819பி), (171908ஏ), (171908பி), (171911ஏ), (171911பி), (171911சி), (171980ஏ), (171980பி), (171980சி), (171980டி), (172040ஏ), (172040பி), (172040சி), (172040டி), (172040இ), (172040எவ்), (172044ஏ), (172044பி), (172075ஏ), (172075பி), (172120ஏ), (172120பி), (172120சி), (173419ஏ), (173419பி), (173419சி), (173419டி), (173429பி), (173429சி), (173474ஏ), (173474பி), (173474சி), (173474டி), (173479ஏ), (173479பி), (173479சி), (173493ஏ), (173494ஏ), (173494பி), (173503ஏ), (173512ஏ), (173512பி), (173556ஏ), (173663ஏ), (173853ஏ), (173853பி), (173853சி), (173871ஏ), (173879ஏ), (173905ஏ), (173905பி), (173905சி), (175422ஏ), (175422பி), (169263ஏ), (169263பி), (169263சி), (170061ஏ), (172941ஏ), (172941பி), (174719ஏ), (174861ஏ), (174912ஏ), (174914ஏ), (175079ஏ), (175088ஏ).

**பருத்தித்துறை**

(145788ஏ), (145788பி), (145788சி), (151645ஏ), (151645பி), (154597ஏ), (154597பி), (154597சி), (154597டி), (155835ஏ), (158466ஏ), (158466பி), (159933ஏ), (159933பி), (160182ஏ), (162420ஏ), (162420பி), (162420சி), (164755ஏ), (165004ஏ), (165313ஏ), (165313பி), (165313சி), (165313டி), (165313இ), (167937ஏ), (169561ஏ), (169598ஏ), (169652ஏ), (169824ஏ), (169824பி), (172158ஏ), (172158பி), (172158சி), (172158டி), (172159ஏ), (172296ஏ), (172352ஏ), (172352பி), (172443ஏ), (172443பி), (172464ஏ), (172476ஏ), (172476பி), (174303ஏ), (174304ஏ), (174304பி), (174316ஏ), (174329ஏ).

**சண்டிலிப்பாய்**

(161780ஏ), (161780பி), (170147ஏ), (170147பி), (170309ஏ), (170309பி), (170309சி), (170309டி), (170361ஏ), (170361பி), (172867ஏ), (172867பி), (172867சி), (172867டி), (172917ஏ), (172918ஏ), (172918பி), (172918சி), (172919ஏ), (173033ஏ), (173033பி), (173033சி), (173033டி), (174735ஏ), (174735பி), (174735சி), (174735டி), (174769ஏ), (174782ஏ), (174782பி), (174816ஏ), (174842ஏ), (174842பி), (174895ஏ), (174895பி), (174900ஏ), (174904ஏ), (174904பி), (174904சி), (174913ஏ), (175006ஏ).

**தெல்லிப்பழை**

(169109ஏ), (172893ஏ), (172893பி), (174855ஏ), (175005ஏ), (175014ஏ), (175026ஏ), (175054ஏ), (175169ஏ),

**உடுவில்**

(169958ஏ), (169958பி), (169958சி), (169958டி), (169962ஏ), (170008ஏ), (170008பி), (172830ஏ), (172830பி), (172929ஏ), (173168ஏ), (173168பி), (173934ஏ), (173934பி), (174741ஏ), (174745ஏ), (174762ஏ), (174762பி), (174784ஏ), (174784பி), (174804ஏ), (174827ஏ), (174871ஏ), (174873ஏ), (174873பி), (174916ஏ), (175029ஏ), (175030ஏ), (175103ஏ).

# ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவே சந்திரிகா - பிரபா சந்திக்க முடியும்

## அதற்கு முன் சாத்தியமில்லை என்கிறார் கதிர்காமர்

புதுடில்லி,டிசெ.20

இலங்கையில் மோதலில் ஈடு பட்டுள்ள இரண்டு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடை பெற்று ஒப்பந்தம் ஒன்று கைச்சாத் தாகும் பட்சத்தில் மாத்திரமே அதில் கைச்சாத்திட இலங்கை ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்காவும் விடு தலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் நேரில் சந்திக்க முடி யும் -

இப்படிக் கூறியுள்ளார் வெளிவி வகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமர். தற்பொழுது நேபாளம் சென் றுள்ள லக்ஷ்மன் கதிர்காமர்- செய்தி யாளர் ஒருவருக்கு அளித்த பிரத்தி யேக பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். தற்போதைய நிலையில் இலங்கை ஜனாதிபதி விடுதலைப்புலிகளின் தலைவரைச் சந்திக்க அனுமதிக்க முடியாது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக் கும் இடையில் முதலில் குறைந்த மட்டத்தில் ஆரம்பக்கட்ட பேச்சுக் கள் விரிவாக நடைபெறவேண்டும்.

இந்தப் பேச்சுக்கள் மூலம் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டால் அதற்கான ஆவணங்களில் கைச்சாத்திடவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வும், புலிகளின் தலைவர் வே.பிரபா கரனும் நேருக்குநேர் சந்திப்பர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரபாக ரன் வன்னியிலிருந்து வெளியே வர வேண்டி இருக்கும்.

இப்படி அவர் சொன்னார்.(இ-8)

### வேம்பொடுகேணி சி.சி.த.க.பா மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.20

வேம்பொடுகேணி சி.சி.த.க பாட சாலையைச் சேர்ந்த தரம் 9 மாண வர்களை பரீட்சை விண்ணப்பப் படிவத்தில் கையொப்ப மிடுவதற்காக இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி மகா வித்தியா லயத்துக்கு வருகை தருமாறு பாட சாலை அதிபர் கேட்டுள்ளார்.(இ-7)

### சனசமூக நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

வலிகாமம் தென்மேற்கு, மானிப் பாய் பிரதேசசபையின் நிதி உதவி யில் புனரமைப்பு செய்யப்பட்ட மாகி யப்பிட்டி மறுமலர்ச்சி சனசமூகநிலை யம் அண்மையில் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

சன சமூக நிலைய தலைவர் அ.யோகராசா தலைமையில் நடைபெற்ற திறப்புவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அன்ரன் ஜோன்ஸ்சன் சம்பிரதாயபூர்வமாக கட்ட டத்தை திறந்து வைத்தார்.

பிரதேசசபை புனரமைப்புப் பணிக் கென ஒரு லட்சம் ரூபா நிதியை வழங்கியிருந்தது. (ம-15-185)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

இசைமாணி முதலாம், மூன்றாம், நான்காம் வருட செய்முறைப் பரீட்சை - 1998

முதலாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான இசை மாணி செய்முறைப் பரீட்சைகள் மருதனார்மடத்திலுள்ள நுண் கலைத்துறையில் 27-12-2000 மு.ப 9.30 மணிக்கு நடைபெறும்.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சை அனுமதி அட்டையுடன் சமுகமளிக்கவும்

நாட்டியமாணி செய்முறைப் பரீட் சைகள் முடித்த மாணவர்கள் தங்களது அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் ஒப்படைக்கவும்.

(C/14363) - பதிவாளர்.

# வலி.மேற்கு பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

வலி.மேற்கு,டிசெ.20

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் பரவாது தடுப்பதற் கான நடவடிக்கைகளை வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் மேற் கொண்டுள் ளார்.

இது தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைக்குட் பட்ட சனசமூக நிலையங்களின் பிரதி நிதிகள், பொதுச்சுகாதாரப் பரிசோத கர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடல் சுழிபுரத்திலுள்ள பிரதேச சபைத் தலைமைச் செயல கத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

தலைவர் ந.திரிலோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பின்வரும் நட வடிக்கைகளை மேற்கொள்வது எனத தீர்மானிக்கப்பட்டது.

பிரதேசத்தின் சகல இடங்களை யும் சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவற் றின் உதவியுடன் சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்தல், இதனை உடனடியாக மேற்கொள்ளுதல்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் (ஜெகன்) மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு டெங்கு காய்ச்சல் மருந்தை யாழ்ப் பாண மாவட்ட மக்களின் நன்மை கருதி உடன் கொண்டு வர ஏற்பாடு செய்யுமாறு கேட்பதெனவும் தீர்மா னிக்கப்பட்டது. (ம-175)

# வண்ணாங்குளத்துக்கு அருகில் அங்காடி வியாபாரிகளுக்குக் கடை

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.நகரப்பகுதியைச் சேர்ந்த அங்காடி வியாபாரிகளுக்கு நகரின் மையப்பகுதியில் - வண்ணாங்குளத் துக்கு அருகில் தற்காலிகக்கடைகள அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று யாழ்வணிகர் கழகப் பிரதிநிதிகளுடன நேற்று நடத்தப்பட்ட கலந்துரையா டலில் எடுக்கப்பட்டதாக யாழ்.மாநகர பிரதி மேயர் என் ரவிராஜ் தெரிவித் தார்.

மேற்படி கடைகள் சுழற்சிமுறை யில் வியாபாரிகளுக்கு வழங்கப்படும் எனவும், பண்டிகைகள் நெருங்கும் காலத்தில் இந்தக் கடைகள் மூலம் பொதுமக்கள் கூடிய நன்மையைப் பெற்றுக் கொள்வர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி மற்றும் கஸ்தூரியார் வீதிப்பகுதி களில் உள்ள கழிவு நீர் வடிகால் களை உடனடியாகப் புனரமைப்பது குறித்தும் -

நகரின் மத்தியில் உள்ள சிலை களை மாநகர சபைக்குரிய நிதியில் இருந்து திருத்திப் பின்னர் அதனைப் பராமரிக்கும் பொறுப்பை வணிகர் கழகத்திடம ஒப்படைப்பது குறித்தும் -

இந்தக் கலந்துரையாடலில் முடி வெடுக்கப்பட்டதாகவும் பிரதிமேயர் என்.ரவிராஜ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் நேற்று பிரதிமேய ரைச் சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர். (இ-7-5)

# தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் தொடரும்

யாழ்ப்பாணம்டிசெ.20

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள வறுமைக் கோட் டின் கீழ் வாழும் அனைத்துக் குடும் பங்களுக்கும் உலர் உணவு நிவார ணம் தொடர்ந்து வழங்கப்படும் என்று யாழ்.செயலக அதிகாரி ஒருவர் கூறி னார்.

குடாநாட்டில் நிவாரணம் பெற்று வரும் குடும்பங்களை மீளாய்வு செய்து 750 ரூபாவுக்கு மேற்பட்ட மாத வரு மானம் பெறுபவர்களின் நிவாரணம் நிறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்ற போதும் தென்மராட்சி மக்களுக்கு உலர் உணவு நிவாரணம தொடர்ந்து சில மாதங்களுக்கு வழங் கப்படும் என்றும் அவர் கூறினார்.

நிவாரணம் பெறும் குடும்பங்க ளுக்கு கிராமசேவை உத்தியோகத தர்கள் மூலம் தற்பொழுது மீளாய் வுப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின றன.

இந்தப் படிவங்கள் பூர்த்தியாக் கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஜனவரி தொடக்கம் ஏனைய இடங்க ளில் 65 சதவீதமான குடும்பங்களின் நிவாரணம் நிறுத்தப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

### இராணுவ ஆய்வாளரின் நூல்

கொழும்பு,டிசெ.20

இலங்கையின் உள்நாட்டுச் சண் டைகள் தொடர்பாக, பிரபல இரா ணுவ ஆய்வாளர் போல் ஹரிஸ் 'உடைந்த சொர்க்கம்' என்ற நூலை வெளியிட உள்ளார்.

சுயாதீன பத்திரிகையாளரான இவர் உலக நாடுகள் பலவற்றின் யுத்த நிலைவரம் தொடர்பாக 30 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி யுள்ளார்.

பிரபல இராணுவ ஆய்வு நூலான 'ஜேம்ஸ்'க்கு இவர் பல நூற்றுக் கணக்கான கட்டுரைகளை எழுதி யவர். இலங்கை தொடர்பாக அவர் வெளியிட உள்ள நூலில் சிதைந்த யாழ்.நகர், மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு, நிலாவெளிக் கடற்கரை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர் கள், போராளிகள் மற்றும் அரசியல் வாதிகள் தொடர்பான படங்கள், விளக்கக்கட்டுரைகள் என்பன இடம் பெறவுள்ளன என்று அவர் தெரிவித் துள்ளார். (இ-8)

### மரக் கன்றுகள் அன்பளிப்பு

வலி.தென் மேற்கு,டிசெ.20

வலி.தென்மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு மரக் கன்றுகளை அன்பளிப்பாக வழங் கும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு மானிப்பாயில் உள்ள வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

பிரதேசசபைத் தலைவர் வெலிச் சேர் அன்ரன் யோன்சன் இன்றைய நிகழ்வில் 500 மரக் கன்றுகளை சன சமூக நிலையங்களுக்கு பகிர்ந்தளிப பார்.

பிரதேசசபைக்கு உட்பட்ட சகல சனசமூக நிலைய பிரதிநிதிகளை யும் நிகழ்வில் கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-185)

**கண்ணீர் அஞ்சலி**

முன்னாள் பொருளாளர்

**த.தம்பிராசா**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை யாக்குகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை.

(C/14367)

## மட்டக்களப்பில் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு - கல்லடி பிரதான வீதியில் பொருத்தப்பட்டிருந்த ரெலிகொம் கபினட்டுக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் குண்டு ஒன்று வெடித்துள்ளது.

எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7-21)

## சிற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை நடத்த பல தரப்புக்களுடனும் பேச்சுக்கள் இடம்பெற்றுவந்தன.

இந்தப் பேச்சுக்களில் சாதகமான நிலை ஏற்பட்டதை அடுத்து காங்கேசன்துறை வரை இந்தக் கப்பலின் சேவையை நடத்த பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படையினரின் அனுமதி கோரப்பட்டுள்ளது என்று தெரியவந்தது.

இந்த அனுமதி கிடைத்ததும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின வழித்துணையுடன் இந்தச் சேவை அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம் - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் நேற்று காங்கேசன்துறைக்கு வந்து திரும்பியது. (இ-3)

## கல்வி நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யவர்களாவர்.

அவர்களின் விவரம் வருமாறு :-

**பலாலி**

காங்கேசபிள்ளை, சிவமகாலிங்கம், ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, மகாதேவா, மருதலிங்கம், செல்வி நாகரட்ணம், கனகநாயகம்.

குயின்ரஸ், சிவலிங்கம், கருணாமூர்த்தி, தருமகுலேந்திரன், சிவானந்தன், இளங்கோ, திருமதி இராதாகிருஷ்ணன்.

**கோப்பாய்**

வி.கே.கணபதிப்பிள்ளை, திருமதி பி.ரட்ணவேல், எஸ்.குமாரசாமி, திருமதி ஜே.தியாகலிங்கம், எஸ்.செந்தில்மணி, எஸ்.சண்முகராஜா, திருமதி எஸ்.சிவனேசன், செல்வி மலர் சின்னையா.

மேற்படி பெறுபேறு குறித்த "பக்ஸ்" செய்தி ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நேற்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. (இ-7)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் வீதி விபத்துகள் குறித்தும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

வடபிராந்திய பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் திலகரட்ணா உட்பட பல இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள இருபதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (இ5)

## அரசும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணர்வை இது உறுதிப்படுத்துகின்றது.

இருப்பினும் இரு தரப்பு நிலைப்பாடுகளிலும் இடைவெளி உள்ளதை அந்த அறிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இது இரு தரப்பினரும் கிட்டிய வருங்காலத்தில் நேரடிப் பேச்சுக்கு நகர்வதைத் தடுப்பதாக உள்ளது.

அத்தகைய எந்த இடைவெளியையும் சமப்படுத்த தற்போதைய சந்தர்ப்பத்தை இரு தரப்பினரும் பயன் படுத்துவர் என்றும் -

நேரடிப் பேச்சுக்குச் செல்லவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நோர்வே அரசை ஊக்கப்படுத்துவார்கள் என்றும் - நான் நம்புகிறேன். இப்படி அவர் மேலும் கூறினார்.(இ-3)

## பேச்சுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சமாதானத்தை மீண்டும் கொண்டுவரக் கூடிய விதத்தில் இலங்கை அரசு முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆக்கபூர்வமான ஆதரவை வழங்கும். நோர்வே மேற்கொண்டுள்ள முயற்சிக்குத் தனது ஆதரவை ஒன்றியம் வழங்கி வருகிறது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடியதை முக்கிய நிகழ்வாக கருதுகிறோம் இந்தப் பேச்சுக்களில் இணைந்து கொள்ள பிரபாகரன் தெரிவித்துள்ள ஆர்வத்தை வரவேற்கிறோம்; நம்புகிறோம்.

சமாதானத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் இலங்கை அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் செலவினங்கள் 40 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதில் பெரும்பகுதி இராணுவ செலவினங்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள சிவில் சமூகம் மற்றும் அரசியல் கட்சிகள் தேசிய மட்டத்தில் சமாதானத்திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கருதுகின்றது.

நாட்டின் ஐக்கியம், பிரதேச ஒற்றுமைப்பாடு ஆகியவற்றைப் பாதிக்காத வகையில் சிறுபான்மைத் தமிழ மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடிய தீர்வு ஒன்றை எட்ட காலதாமதம் இன்றி உடனடியாகச் சகல தரப்பினரும் பேச்சுக்களை ஆரம்பிக்க அழைப்பு விடுக்கிறோம் - என்றுள்ளது. (இ-3-8)

## 1400 தொண்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராசா, எஸ்.சிவதாசன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குணசேகரம் ஆகியோர் பங்குபற்றினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இதில் பார்வையாளராகக் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களின் தகுதி அடிப்படையில் நானூறு பேருக்கு இந்த ஆண்டு முடிவுக்குள் நிரந்தர நியமனம் வழங்கல் மேலும் ஆயிரம் பேருக்கு அடுத்த ஆண்டில் நிரந்தர நியமனம் வழங்கல்.

★ வடக்கு - கிழக்கில் பகுதிநேர, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆங்கில ஆசிரியர்களில் தகுதியானவர்களைத் தொண்டர் ஆசிரியர்களாகக் கணித்து நிரந்தர நியமனம் வழங்கல்.

★ யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய உடற்கல்வி டிப்ளோமா தாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரி அவர்களுக்கு நியமனம் வழங்க ஏற்பாடு செய்தல்.

★ யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் கற்கைநெறியை பின்பற்றுவோருக்கு நியமனம் வழங்க வசதியாக பாடசாலைகளில் மீன்பிடியியல் பாடத்தைப் போதிப்பது குறித்து ஆராய்தல். (இ-3)


**DCS**

**COLLEGE OF COMPUTER TECHNOLOGY**

(British ACP Recognised Training Centre)

T. P : 021-2596 e - mail : dcsjaf@sltnet.lk P.O Box No: 144

124/2, Palaly Road, Thirunelvely. H.M.H.V Road, Nelliady.

**DCS இன் 2001/2002 கல்வியாண்டுக்கான 5000 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்**

- குடாநாட்டிலுள்ள சகல தரப்பினருக்கும் ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட கற்கைநெறிகள்.
- திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட கையேடுகள் **(Handouts)**, செய்முறை கையேடுகள் **(Practical tutes)** என்பனவற்றுடன் பொதுச் செய்முறை **(Common practical)** உள்ளடக்கிய சிறப்பான விரிவுரைகள்.
- பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக்கட்டணம் இன்றி இலவச நுழைவுத்தேர்வுப் போட்டிப்பரீட்சை, மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.




- மாணவர்களின் வசதி கருதி *January 2001, April 2001, September 2001* ஆகிய மூன்று பிரிவுகளாக கற்கைநெறிகள் ஆரம்பமாவதுடன், இப்பிரிவுகள் யாவும் வார,வார இறுதி நாட்களில் காலை, மாலை வகுப்புகளாக நடைபெறும்.

விண்ணப்படிவங்களை எமது அலுவலகங்களிலும் குடாநாட்டிலுள்ள சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 05-01-2001**


## வரவு செலவுத் திட்டம் 2001

(255ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 1979ம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 179 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட 2001ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 20. 12. 2000ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பெனடிக்ற் தனபாலசிங்கம்**
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி,*
*18.12.2000.*

(C/14365)


எக்கணமியின் புதிய ஓடியோ **CD** வெளியீடுகள்

★ கண்டேன் சீதையை
★ தாலி காத்த காளியம்மன்
★ குங்குமப்பொட்டு கவுண்டர்
★ மனுநீதி

**வீடியோ எக்கணமி மியூசிக் கோனர்**

297, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

*கிளைகள்:* மாக்கூற் - சங்கானை, நாச்சிமார்கோவிலடி.

(81675)



**IIS** இன் கணனிக்கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் -2001

**விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்**

விண்ணப்ப முடிவுத்திகதி 24/12/2000

விண்ணப்ப முடிவுத்திகதி மேலும் எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

**A/L 2001** பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்குகென விசேடபிரிவுவொன்று செப்டெம்பர் மாதம் முதல்வாரத்தில் ஆரம்பிக்கப்படும்

வருடம் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

**IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி**

**Institute of Informatics Studies**

IIS, 100, ... 021-2831 E-mail : iis@sltnet.lk


## மேசைப்பந்தாட்டப் போட்டி

யாழ். பல்கலைக்கழக மேசைப்பந்தாட்டக் குழுவினர் வருடாந்தம் யாழ். ரோட்டறிக்கழகம் மற்றும் 'உதயன்' நிறுவனத்தினருடன் இணைந்து நடத்தும் மேசைப்பந்தாட்டப் போட்டி வழமைபோல் இவ்வருடமும் நடைபெறவுள்ளது.

ஆர்வம் உள்ள அனைவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

★ விண்ணப்பப் படிவங்களை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவு திகதி, வீரர் ஒழுங்குத் தெரிவு | 27.12.2000 மாலை 4.00 மணி |
| போட்டி ஆரம்பம் | –29.12.2000 காலை 9.00 மணி |
| இறுதி நிகழ்வுகள் | –31.12.2000 மாலை 3.30 மணி |

-யாழ்.பல்கலைக்கழக மேசைப்பந்தாட்டக் குழுவினர்.

(C/14364)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு சுப்பையா

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பையா நேற்று (19.12.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் பாஸ்கரன்(கனடா), பிரபாகரன் (ஜேர்மனி), கலைவாணி, வசிகரன்(பிரான்ஸ்), கிருபாகரன் (வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிஷ்ணபாலன்(யாழ்.நீதிவான் நீதிமன்றம்), வள்மதி (கனடா), சிவரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் இராகுலன், கீர்த்திகா, சிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அண்ணப்பிள்ளை, காலஞ்சென்ற நாகம்மா, தங்கம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2000) புதன்கிழமை மதியம் ஒரு மணியளவில் மூளாய் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு..கிருபாகரன்
(மகன்)

*மூளாய் மேற்கு,*
*சுழிபுரம்.*

(C/14366)

### வி.க.இராசையா

(முன்னாள் பிரபல வர்த்தகர், ரட்ணம் - மொறட்டுவ, உரிமையாளர், ரட்ணம் - சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த வி.க.இராசையா நேற்று (19.12.2000) செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தையல்முத்துவின் அன்புக் கணவரும் நாகரத்தினம், செல்வராணி(கொழும்பு), இரட்ணகுபேரன்(கனடா), இராஜதுரை, இராயசிங்கம், இராஜேந்திரம் (கனடா), காலஞ்சென்ற சற்குணராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மூ.குருசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர், சுழிபுரம்), பொ.ஜெயரட்ணசிங்கம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், மின்சாரசபை, கொழும்பு), யோகேஸ்வரி (கனடா), தவமணி, ஞானாம்பிகை, நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2000) மாலை 2.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
இ.இராஜதுரை (மகன்),
மூ.குருசாமி
(மருமகன் - ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*சுழிபுரம் மேற்கு.*

(C/14368)


## வணிகப் பிரமுகர்களே!

மேலும் மேலும் உங்கள் பெயர் விலாசங்களை 2001ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்துகொள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வண்ண வண்ண வடிவக் கலண்டர்களையும், டெஸ்க், மனேஜ்மன்ற் மற்றும் பொக்கற் டயறிகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கொள்வனவுத் தொகைக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம். தொலைபேசி: 2567

(81790)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.